शुक्लवस्त्रधराङ्गः सर्व(शुक्ल)पुष्पैरलङ्कृतः ।
[नीलोत्पलकुमुदहस्तं शान्तं ...]

अथ क्षेत्रपाललक्षणम् ॥

त्रिगुणः क्षेत्रपालः स्यात् सत्त्वादिगुणभेदतः ॥

श्वेतो रक्तस्तथा कृष्णः सात्त्विकादिगुणेष्वपि ।
द्विचतुर्हस्तकः सत्त्वो राजसः षड्भुजान्वितः ॥ १८ ॥

தேஹகாந்தியும், 2 கைகளும், ஸௌம்யமான முகமும், ஸுவர்ணயஜ்ஞோபவீதமும் (தங்கப் பூணூலும்) ஸகல ஆபரணங்களாலும் அலங்காரமும், வெண்மையான உடையும், பற்பல (வெண்மையான) புஷ்பங்களாலாகிய அலங்காரமும் உடையவராய், கைகளில் ஆம்பலும் நீலோத்பலமும் ஏந்தி, சாந்தமான ஆகாரத்துடன், நின்ற வடிவமாகவோ, உட்கார்ந்த வடிவமாகவோ, இருப்பதாம். சந்திர லக்ஷணம் கூறப்பட்டது. இனி க்ஷேத்திரபால(பைரவ) லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

க்ஷேத்ரபாலக(பைரவ)லக்ஷணம்.

க்ஷேத்திரபாலக மூர்த்தியானது, ஸத்துவகுண பிரதானமானது, ரஜோகுண பிரதானமானது, தமோகுண பிரதானமானது என மூன்று விதமாகும். ஸத்துவ மூர்த்தியானது, வெளுப்பு நிறமாகவும், ரஜோகுண மூர்த்தியானது சிவப்பு நிறமாகவும், தமோகுண மூர்த்தியானது கருப்பு நிறமாகவும் இருப்பவைகளாம். ஸத்துவ மூர்த்திக்கு 2 அல்லது 4 கைகளும், ரஜோமூர்த்திக்கு 6 கைகளும், தமோ

தாமஸஸ்யாஷ்டஹஸ்தாஸ்ஸ்யு: ஸ்தாநகே ஸமபாதக: |
ஆஸநே பத்மபீடம் ஸ்யாத் பத்ரபீடமதாபி வா || ௭௰ ||

பைரவம் து த்ரிநேத்ரம் ஸ்யாத் ஸாத்விகம் த்விபுஜம் யதி |
ஶூலம் தக்ஷிணஹஸ்தே து வாமஹஸ்தே கபாலகம் ||

சதுர்புஜே து பரே ஸவ்யே கட்வாங்கம் வாமகே அஸிம் |
அபயம் வரதம் பூர்வே ஸத்வம் வாமகம் ததா || ௭௨ ||

ஸவ்யவாமே பரே பூர்வே வாமே ஹஸ்தே து கண்டிகாம் |
ஸாத்விகம் ப்ரோக்தம் ராஜஸம் ஶ்ருணு ஸுவ்ரத ||

பைரவம் ஸாத்விகம் ஸ்யாத் தக்ஷிணே து கரத்ரயே |
கேடகம் ச கபாலம் ச நாகபாஶம் ச வாமகே || ௭௪ ||

மூர்த்திக்கு 8 கைகளுமாம். ஸ்தாநக மூர்த்தியானால் ஸம பாதமாம். (ஆஸநமானால்) பத்மபீடம் அல்லது பத்திர பீடத்திலிருப்பதாகும். பைரவ மூர்த்தியானது 3 கண் களுடையதாகும். (70)

பைரவரின் ஸத்துவ மூர்த்தியானது 2 கைகளுடனிருந் தால், வலது கையில் சூலமும் இடது கையில் கபாலமும் இருப்பதாகும்.

4 கைகளிருந்தால், வலது பரபுஜத்தில் கட்வாங்கமும் இடது கையில் கத்தியும், பூர்வ ஹஸ்தங்களில் அபயவரத மும் இருப்பதாகும். (கட்வாங்கம்-பரமேசுவரனுக்குரிய ஆயுதவிசேஷம்.) (72)

அல்லது பரஹஸ்தங்கள் முன்போலவும் பூர்வஹஸ்தம் இடது கையில் மணியுமிருப்பதுமாகும்.

இவ்விதம், ஸாத்துவிக மூர்த்தியின் லக்ஷணம் கூறப் பட்டிருக்கிறது. ஏ ஸுவ்ரத! இனி ராஜஸ மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (73)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[[illegible]]

[illegible]

[illegible]

[illegible]

ராஜஸ மூர்த்தியானது, வலது கைகள் மூன்றிலும், சூலம்-கத்தி-மணி இவைகளையும், இடது கைகள் மூன்றிலும் கேடயம்-கபாலம்-நாகபாசம் இவைகளையுமுடையதாகும். (74)

தாமஸ மூர்த்தியானது, இடது கையில் வில்லும், வலது கையில் அம்புமுடையதாம். மற்ற கைகளில் ராஜஸ மூர்த்திக்குக் கூறிய ஆயுதங்களையாம்.

(தாமஸ மூர்த்தியானது) சிவப்பு நிறமாகவும் ஊர்த்துவ முகமாகவும் இருந்தும் சிகாமண்டலமும், உக்கிரமான திருஷ்டியும், பல நாகங்களை அணிந்தும், 3 கண்களுடையதாகவும், நெருப்புப்போன்ற வடிவமுடையதாகவும் செய்யத்தக்கதாகும். (76)

இவ்விதம் பைரவ லக்ஷணம் கூறப்பட்டுள்ளது இனி ஈசான லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

ஈசாந லக்ஷணம்.

ஈசான மூர்த்தியானது, 2 கைகளுடையதாம். வெளுப்பு நிறமும், வெளுப்பு வஸ்திரமுமுடையதாம். ஸகலவித

ஸாங்க்யஜ்ஞானவிஶேஷஜ்ஞ ஸாங்க்யவிஜ்ஞானவித் ஸ்ம்ருத: |
ஶூலம் தக்ஷிணஹஸ்தே து கபாலம் வாமஹஸ்தகே || ௭௮ ||

மஹாஸிதபத்மாஸனஸ்த: ஸர்வாலங்காரலக்ஷணம் |

அத ஆதித்யலக்ஷணம் ||

த்விபுஜா: பத்மஹஸ்தாஶ்ச ரக்தபத்மாஸனே ஸ்தி²தா: || ௭௯ ||

ரக்த(வ்ருத்த)ரத்னஸம்யுக்த கரண்டமகுடான்விதா: |
ரக்தாம்பரதராஸ்ஸர்வே ஸர்வாபரணபூஷிதா: || ௮௦ ||

ஸந்நவீரஸமாயுக்தா: ஸர்வே த்வாதஶ ஸம்ஸ்ம்ருதா: |
விகர்தனோ விவஸ்வாம்ஶ்ச மார்த்தாண்டோ பாஸ்கரோ ரவி: ||

ஆபரணங்களையுமணிந்து, ஜடாமகுடமும் பூநூலும் அணிந்து, வலது கையில் சூலாயுதமும் இடது கையில் கபாலமும் ஏந்தி, வெண்தாமரைமலரில் வீற்றியிருப்பதாம். இவ்விதம் ஈசான லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஆதித்தியர்களின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

ஆதித்திய லக்ஷணம்.

ஆதித்தியர்கள், 2 கைகளும், 2 கைகளிலும் செந்தாமரை மலர்களை ஏந்தியும், செந்தாமரை மலரில் உட்கார்ந்து கொண்டுமிருப்பவர்களாவார்கள். (79)

சிவப்பு நிறமாய் வட்டமாக இருக்கும் (வட்டமாகப் பதிப்பிக்கப்பட்ட ரத்தினங்களுடன்கூடிய) கரண்டமகுடத்தை அணிந்திருப்பவர்களாவார்கள். சிவப்பு ஆடையுடுத்தி, ஸகலவிதமான அணிகலங்களையுமணிந்து, சன்னவீரம் தரித்து இருப்பவர்களாவார்கள். இவ்விதமான ஆதித்தியர்கள் 12 பேர்களாவார்கள்.

1. விகர்த்தநன் 2. விவஸ்வான் 3. மார்த்தாண்டன்

லோகபால: ப்ரகாஶஶ்ச லோகஸாக்ஷீ த்ரிவிக்ரம: |
ஆதித்யஶ்ச ததா ஸூர்ய: அம்ஶுமாலீ திவாகர: || அஉ ||

ஏதே வை த்வாதஶாதித்யா: உத்தராதிக்ரமாத் ஸ்திதா: |
ஏவம் ஷோடஶஸம்க்யாதா: அத த்ரிம்ஶத்த்வய லக்ஷ்யதே ||

அத அநந்தலக்ஷணம் ||

ஸௌம்யரூபஶ்சதுர்பாஹு: ஸர்வாபரணபூஷித: |
ஜபாபுஷ்பநிபாகார: கரண்டமகுடாந்வித: || அச ||

ஸிதவஸ்த்ரதர: ஶாந்த: த்ரிநேத்ர: பத்மஸம்ஸ்தித: |
அபயம் வரதம் டங்கம் ஶூலம் ஆயுதபாணிக: || அரு ||

---

4. பாஸ்கரன் 5. ரவி 6. லோகபாலன் 7. பிரகாசன் 8. லோகஸாக்ஷி 9. த்ரிவிக்ரமன் 10. ஆதித்தியன் 11. ஸூரியன் 12. அம்சுமாலி எனப்படும் திவாகரன் ஆகிய 12 பேர்களும் துவாதசாதித்தியர்களாவார்கள். (82)

இவர்கள் வடக்கிலிருந்து முறையே இருப்பவர்களாவார்கள்.

இவ்விதமாக 16 பரிவார மூர்த்திகளின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி 32 பரிவார மூர்த்திகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (83)

அனந்த லக்ஷணம்.

அநந்த மூர்த்தியானது, ஸௌமியமான வடிவமுடையதாகும். 4 கைகளுடையதாம். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாம். சம்பரத்தம்பூவைப்போன்ற நிறமுடையதாம். கரண்டமகுடத்தை அணிந்திருப்பதாம். வெளுப்பு வஸ்திரம் தரித்ததாம். சாந்தமான முகமுடையதாம். 3 கண்களுடையதாம். கைகளில், அபயம்–வரதம்–உடுக்கை–சூலம் இவைகளை ஏந்தி, பத்மாஸனத்திலிருப்பதாம். (85)

अथ अर्कलक्षणम् ||

अर्कश्शान्तश्चतुर्बाहुः सर्वाभरणभूषितः |
हिरण्यसदृशप्रख्यः श्वेतवस्त्रान्वितः || ८७ ||

अभयं वरदं शक्तिं खेटं करे धारयेत् |
सोपविष्टः पद्मपीठे तु आ(सू)र्यं परिकल्पयेत् ||

अथ भवलक्षणम् ||

भवः शान्तश्चतुर्बाहुः जटामकुटसंयुतः |
अतिरक्तसम(प्रभ)श्चैव सर्वाभरणभूषितः || ८८ ||
हिरण्यसदृशप्रख्यः श्वेतवस्त्रान्वितः |
अभयं वरदं शूलं पाशं चैव धारयेद्भवः || ८९ ||

அர்க்கன் லக்ஷணம்.

அர்க்கன் சாந்தமான வடிவமும் 4 கைகளும் உடையவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பார். ஸுவர்ணம்போன்ற மேனியும் வெண்பட்டாடையும் உடையவராவார். கைகளில் அபயம்--வரதம்—கத்தி—கேடயம் இவைகளை ஏந்தியிருப்பவராவார். பத்ம பீடத்தில் உட்கார்ந்திருப்பவராவார். இவ்விதம் ஆரியனை (ஸூரியனை) கல்பிக்கவேண்டும். (87)

பவ லக்ஷணம்.

பவன், சாந்தமான வடிவமுடையவராவார். மிகச் சிவந்த மேனியும் 4 கைகளுமுடையவராவார். ஜடா மகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பார். அவருடைய மேனி ஸுவர்ணம்போன்றதாகும். வெண் பட்டாடையுடுத்தியிருப்பார். கைகளில் அபயம்-வரதம்-சூலம்-பாசம் இவைகளை ஏந்தியிருப்பவராவார் (89)

𑌅𑌥 𑌮𑌰𑍁𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ||

𑌸𑍌𑌮𑍍𑌯𑌰𑍂𑌪𑌧𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌰𑍍𑌪𑌾𑌢𑍍𑌯𑍌 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌃 |
[𑌸𑍌𑌮𑍍𑌯𑌰𑍂𑌪𑌧𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌪𑌾𑌢𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑍋 (𑌹𑌸𑍍𑌤𑌾𑌃)
𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌃 |]
𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌶𑌾𑌨𑍍𑌤𑌿(𑌤𑌾𑌃) 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾(:) 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣-
𑌭𑍂𑌷𑌿𑌤𑌾(:) || ௯௰ ||

𑌨𑌾𑌨𑌾𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌾(𑌙𑍍𑌗𑌾𑌃) 𑌵𑌾 𑌨𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌭𑍂𑌷𑌾-
𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾(:) |
𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌾(:) 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾(ः) || ௯௧ ||

𑌅𑌥 𑌅𑌪𑍍𑌸𑌰𑍋𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ||

𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣(𑌣𑌾)𑌃 𑌕𑍃𑌶𑍋𑌦𑌰𑍍𑌯𑌃 𑌪𑍀𑌨𑍋𑌰𑍁𑌜𑌘𑌨𑌸𑍍𑌤𑌨𑌾: |
𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌵𑌸𑍍𑌤𑍍𑌰(𑌾𑌢𑍍𑌯𑌾)𑌭𑍈𑌃 𑌨𑌾𑌨𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾: ||

மருத்துக்களின் லக்ஷணம்.

மருத்துக்கள், (மருத்து—வாயு) சாந்தமான உருவம் படைத்தவர்களாவார்கள். இரு கைகளிலும் ஸர்ப்பங்களை தரித்துக்கொண்டிருப்பார்கள். இரண்டு கண்களுடையவர்கள். மிக்க அழகும் சாந்தமுமுடையவர்கள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, பற்பல வாஸனை திரவியங்களையும் பலவித புஷ்பங்களையும் அணிந்திருப்பார்கள். கரண்ட மகுடம் தரித்து பத்மபீடத்தில் இருப்பவர்களாவார்கள். (91)

அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணம்.

அப்ஸரஸ்ஸுகள், பயிர்போன்று பசுமையான நிற முடையவர்களாவார்கள். சிறிது விலக்ஷணமான (சிறிது ஒட்டிய) வயிறு உடையவர்கள். பருத்த துடை-பிருஷ்ட பாகம்-ஸ்தநங்களையுடையவர்களாவார்கள். தங்க ஜரிகை

ஸவ்யாபஸவ்யத்விஹாகாரா பத்மோத்பலயுதா: கரே |
ஜாநுலம்பஹஸ்தாஸ்து ஸர்வே(ஸர்வாஸ்து) ஸமபங்கிகா: ||

அத கௌரீலக்ஷணம் ||

ஸூக்ஷ்மாங்கீ நீலாபா (ஸஸ்யஸ்யாமளதநு:) சாந்தா ஸௌவர்ண-
வஸ்த்ரதரா வரா |
சதுர்புஜா த்ரிநேத்ரா ச ஸர்வாபரணபூஷிதா ||
அபயம் வரதம் டங்கம் சூலம் ச தததீ கரை: |
கௌரீலக்ஷணமாக்யாதம் யதா ஸகலலக்ஷணே || ௯௩ ||
தமேவ காரயேத்தீமாந் பூர்வவச்ச கேவலமூர்த்திகம் |

களுடன் கூடிய பலநிற பட்டாடைகளை அணிந்திருப்பார்கள். ஒரு கையில் செந்தாமரை மலரேந்தி மற்றொரு கையை முழங்கால்வரையில் தொங்கவிட்டுக்கொண்டு இருப்பவர்களாவார்கள். இவர்கள் யாவரும் ஸமபங்க லக்ஷணமுடையவர்களாவார்கள். (93)

கௌரீ லக்ஷணம்.

கௌரீ தேவியானவள், மெல்லிய உடலும் நீலநிறமுமுடையவளாவாள். (பயிர்போன்ற பசுமை நிறமுடையவளாவாள்). சாந்தமான தோற்றமுடையவள். ஸுவர்ண வர்ணமுடைய ஆடையை அணிந்திருப்பவளாவாள். 4 கைகளும் 3 கண்களுமுடையவளாவாள். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவளாவாள். கைகளில், அபயம்-வரதம்-டங்கம் (உளி)-சூலம்-இவைகளை தரித்திருப்பாள். இவ்விதமாக ஸகல லக்ஷணத்தில் கௌரீ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

சுத்த ஸத்வ பிரதானமான இந்த மூர்த்தியை புத்திமானாயிருப்பவன், கூறியுள்ளபடியே செய்து ஸ்தாபிக்க வேண்டும்.

அத² ஸர்வலக்ஷணம் ||

ஸர்வமூர்த்திஸ்து ஸங்கா²ப⁴ஸ்சதுர்பு⁴ஜ: ஸர்வாப⁴ரணபூ⁴ஷித: || ௯௬ ||

ஜடாமகுடஸம்யுக்த: ஸர்வகாமப²லப்ரத³: |

அப⁴யம் வரத³ம் ஸக்திம் கே²டகம் ச கரைர் த⁴ரேத் || ௯௭ ||

பத்³மாஸநே ஸ்தி²தோ தே³வ: ஸர்வலக்ஷண (ஸம்மித:) |

அத² ப்³ரஹ்மலக்ஷணம் ||

அத² ப்³ரஹ்மா சதுர்வக்த்ரஸ்சதுர்பு⁴ஜ: ஸ்வர்ணாப⁴: ஸர்வாப⁴ரண(பூ⁴)

பூ⁴ஷண: || ௯௮ ||

ஸர்பாப⁴ரணஸம்யுக்த: ஸுக்லவஸ்த்ரோத்தரீயக: |

யஜ்ஞோபவீதஸம்யுக்தோ மேக²லாஸூத்ரஸம்யுத: || ௯௯ ||

சர்வ லக்ஷணம்.

சர்வ மூர்த்தியானது, சங்கு-முல்லை-சந்திரன்-இவைகளைப்போல வெண்மையான நிறமுடையது. 4 கைகள் உடையதாம். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பதாம். ஜடாமகுடத்தை தரித்திருப்பதாம். கைகளில், அபயம்-வரதம்-சக்தி-கேடயம்-இவைகளை ஏந்தியிருப்பதாம். பத்மாஸநத்தில் ஸ்தாநகமாக இருப்பதாம் இவ்விதம் சர்வ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

பிரம்ஹதேவ லக்ஷணம்,

பிரம்ஹதேவர், 4 முகங்களும், 4 கைகளும். பொன்னிறக் கண்களுமுடையவராவார். ஸர்பங்களை ஆபரணங்களாக அணிந்திருப்பவராவார் ? [ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார்] வெண்பட்டாடையுடுத்தி, மான் தோலை உத்தரீயமாகக் கொண்டிருப்பவராவார் பூநூலணிந்திருப்பார். அரை ஞாணுடன் மேகலை என்னும் கட்டுவாரு

[illegible]

* [illegible]

மணிந்திருப்பார். வெண்சந்தணம் பூசி வெண்மையான மாலையுமணிந்திருப்பார். காதுகளில் குண்டலங்களை யணிந்திருப்பார்.

வலது கைகளில், ஜபமாலையும் கூர்ச்சமும் (கூர்ச்சம்-தர்பத்தால் முறையுடன் செய்யப்பட்ட ஒருவித முடிச்சு) இடது கைகளில் கமண்டலமும் (கிண்டிபோன்ற அமைப்புடைய பாத்திரம்.) குசமும் (தர்ப்பப்புல்) தரித்திருப்பவராவார்.

அல்லது, வலதுகைகளில் ஸ்ருக்-ஸ்ருவம்-இவைகளையும் இடது கைகளில் ஆஜ்யஸ்தாலீ-தர்ப(முஷ்டி)ம் - இவைகளையும் தரித்திருப்பவராவார். [ஸ்ருக்-ஸ்ருவம் இவைகள் யாகங்களில் ஹோமம் செய்ய ஸாதனமாக, மரத்தால் செய்யப்பட்ட கருவிகள். இவைகள், சிறிய முட்டைக் கரண்டியைப்போல் இருக்கும்]

* [illegible]

𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌤𑌥𑍈𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌰𑍂𑌪𑌂 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ।
𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌦𑌕𑍍𑌷𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇 ॥ ௨௪ ॥

𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌵𑌾 𑌹𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।

𑌅𑌥 𑌶𑌿𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌶𑌿𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௨௫ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑍀𑌤𑌕𑌃 ।
𑌨𑍇𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௨௬ ॥

அல்லது, ஆஸநத்தில் உட்கார்ந்துகொண்டு முன் கைகளை வரதமாகவும் அபயமாகவும் வைத்துக்கொண்டு, இரு கால்களையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைத்து வைத்துக்கொண்டு, மேட்ர மூலத்திற்குமேலே (அதாவது நடு மடியில்) இரு கைகளில் இடதுகையை மேலே நோக்கி வைத்து அதன்மேலே வலதுகையையும் முன்போலவே மே நோக்காகவே வைத்துக்கொண்டு, இருப்பவராவார்.

அல்லது, முன்கைகள் அபயம் வரதமாகவும், புறக் கைகளில் வலக்கையில் ஜபமாலையும் இடக்கையில் கமண்டலமும் கொண்டிருப்பதுமாம்.

வலது பக்கத்தில் ஸரஸ்வதியும் இடது பக்கத்தில் ஸாவித்திரியுமிருப்பார்கள்.

நின்ற வடிவமானாலும் உட்கார்ந்த வடிவமானாலும் பிரம்மதேவர் பத்மபீடத்திலிருப்பதாகும்.

சிவோத்தம லக்ஷணம்.

சிவோத்தம மூர்த்தியானது, வெளுப்பு நிறமும் 4 கை களும் 2 கண்களும் ஸகல ஆபரணங்களாலும் அலங்கா மும் வெளுப்பு வஸ்திரமும் பூநூலும் கரண்ட மகுடமு

𑌅𑌭𑌯𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌶𑍂𑌲𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌵𑌹𑌨𑍍𑌤𑍁 𑌕𑌰𑍈𑌃 ।
𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌃 𑌸𑌮𑌪𑌾𑌦𑌕𑌃 ॥ ௱௭ ॥

𑌅𑌥 𑌭𑍃𑌗𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌭𑍃𑌗𑍁𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌤𑌨𑍁𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑍋 𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑌯𑌵𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௱௮ ॥

𑌅𑌭𑌯𑌵𑌰𑍋𑌪𑍇𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ।
𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍋 𑌵𑌾𑌸𑌨𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍇 𑌭𑍃𑌗𑍁𑌶𑍍𑌶𑍁𑌭𑌃 ॥

𑌅𑌥 𑌨𑌾𑌰𑌦𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍌𑌶𑌿𑌕𑍈𑌕𑌨𑍇𑌤𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨𑌾𑌰𑌦𑍀𑌯𑌂 𑌤𑌥𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌵𑌤𑍍 𑌕𑍌𑌶𑌿𑌕𑌂 𑌚 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥

முடையதாகும். கைகளில், அபயம்-வரதம்-சூலம்-பாசம் இவைகளை ஏந்தியிருப்பதாகும். பத்ம பீடத்தில் ஸம பாதமாகவும் ஸ்தாநகமாகவுமிருப்பதாகும். (107)

பிருகுமுனிவரின் லக்ஷணம்.

பிருகுமுனிவர், சாந்தமான வடிவமுடையவராவார். வெண்மையான வஸ்திரமும், 2 கைகளும் உடையவராவார். கரண்ட மகுடம் தரித்தவராவார். 2 கைகளிலும் அபயமும் வரதமும் தரித்திருப்பவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். ஸ்தாநகவடிவமானாலும், ஆஸந வடிவமானாலும், பத்மபீடத்தில் இருப்பதாகும். இந்த மூர்த்தியானது சுபகரமானதாகும். (109)

ஈச-அகஸ்திய-கௌசிக-ஏகநேத்ர லக்ஷணம்.

ஈச லக்ஷணம் முன்னமே (பவ லக்ஷணத்தில்) கூறப்பட்டுவிட்டது. அகஸ்திய லக்ஷணத்தையும் (ஸப்தர்ஷி லக்ஷணத்தில்) முன்பு கூறியதுபோலவே கொள்ளவும். கௌசிக லக்ஷணமும் அவ்விதமேயாம்.

𑌏𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌃 𑌸𑍁𑌰𑍂𑌪𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌕𑍍𑌷𑍌𑌮𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌰𑍀𑌧𑌾𑌨𑌃 𑌬𑌨𑍍𑌧𑍂𑌕𑌕𑍁𑌸𑍁𑌮𑌪𑍍𑌰𑌭𑌃 ॥ ௧௧ ॥

𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ।
𑌅𑌭𑌯𑌵𑌰𑌦𑍋𑌪𑍇𑌤𑌃 𑌟𑌙𑍍𑌕𑌶𑍂𑌲𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௧௨ ॥

𑌅𑌥 𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌰𑍍𑌣𑌾 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ॥ ௧௩ ॥

𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌕𑍍𑌷𑍀 𑌸𑌿𑌤𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌾 ।
𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 ॥

𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌂 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚 𑌕𑌰𑌦𑍍𑌵𑌯𑍇 ।

ஏக வக்த்ரமூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களும், சம்பரத்தம் பூவின் நிறமும், வெண்பட்டாடையும், சாந்தமான உருவமும் உடையதாய் ஜடாமகுடம் தரித்து ஸகல அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கைகளில், அபயம்-வரதம்-டங்கம்-சூலம் இவைகளை தரித்து இருப்பதாகும்.

விக்நேசுவர-ஸரஸ்வதி லக்ஷணம்.

தேசிகோத்தமன், முன்பு கூறியுள்ள லக்ஷணத்துடன் விக்நேசுவரரை செய்து ஸ்தாபிக்கவேண்டும்.

ஸரஸ்வதி தேவியானவள், 4 கைகளும், வெளுப்பு நிறமும், வெளுப்பு ஆடையும் உடையவளாவாள். வெண்தாமரை மலரில் உட்கார்ந்திருப்பவளாவாள். அழகிய கண்களையுடையவளாவாள். யஜ்ஞோபவீதமணிந்து, முக்தாஹாரமும் அணிந்திருப்பவளாவாள். ஜடாமகுடம் (சடையாலாகிய மகுடம்) தரித்திருப்பவளாவாள். வலது கைகளில் வியாக்கியான முத்திரையும் (சின்முத்திரையும்)

𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌚𑌾𑌰𑍁𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 ॥

𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑍇𑌵𑌿𑌤𑌾 𑌪𑌰𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑍀 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ॥ ௬௬ ॥

𑌅𑌥 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾𑌸𑍀𑌨𑌾 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌪𑍍𑌰𑌭𑌾 ।
[illegible] 𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 ॥ ௬௭ ॥

𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌯𑍌𑌵𑌨𑌾 [illegible] 𑌸𑌵𑌿𑌲𑌾𑌸𑌾 ।
𑌰𑌕𑍍𑌤𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌪𑍀𑌨𑌗𑌣𑍍𑌡𑌾 𑌚 [illegible] 𑌪𑍀𑌨𑌸𑍍𑌤𑌨𑍀 ॥

[illegible] ।

ஜபமாலையும், இடது கைகளில் புஸ்தகமும் குண்டிகையும் (கிண்டி) தரித்திருப்பவளாவாள். மூன்று கண்களும் அழகிய உருவமுமுடையவளாவாள். ருக்கு-யஜுஸ்-ஸாம-என்ற மறைகளாலும் முனிவர்களாலும் ஸேவிக்கப் பட்டிருப்பவளாவாள். வாக்குக்கு அதிதேவதையான ஸரஸ்வதிதேவி, இத்தகைய லக்ஷணங்களுடை யவளென்று கூறப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மீ லக்ஷணம்.

லக்ஷ்மீ தேவியானவள், பத்மாஸநத்தில் உட்கார்ந்திருப்பவளாவாள். இரண்டு கைகளும் பொன்னிற மேனியுமுடையவளாவாள். காதில் கற்கள் பதித்த பொன்தோலையணிந்திருப்பவளாவாள். நல்ல யௌவனப்பருவமும், அழகிய அங்க அமைப்பும், வளைந்த புருவமும், அழகு நிறைந்த விலாஸமும் உடையவளாவாள். சிவந்த கண்களும் பருத்த (சதைப்பத்துள்ள) கன்னங்களும், ரவிக்கை அணிந்த ஸ்தநங்களுமுடையவளாவாள். தலை அணியும்

அம்போ⁴ஜம் த³க்ஷிணே ஹஸ்தே வாமே ஶ்ரீப²லமிஷ்யதே ||

ஸூக்ஷ்மமத்⁴யா விஶாலஶ்ரோணீ பீதாம்பரவேஷ்டிதா |
ஸர்வாப⁴ரணஸம்யுக்தா ச ஸர்வாலங்காரபூ⁴ஷிதா || ௩௨ ||

அத² ஏகருத்³ர-பஶுபதி-வஸூனாம் லக்ஷணம் ||

ஏகாக்ஷவத்³ருத்³ரவதே³கருத்³ர: கார்யோ விஶேஷத: |
பஶுபதிம் ததை²வாத்ர லோகேயஸ் ஶிவாதி³கோத்³ப⁴வ: ||

த⁴ரோ த்⁴ருவஶ்ச ஸோமஶ்ச ஆபஶ்சைவானலஸ்ததா² |
அனிலஶ்ச ப்ரத்யூஷ: ப்ரபா⁴வ(ஸ)ஶ்ச ததை²வ ச ||

வஸவோஷ்டௌ ரக்தவர்ணா த்³விநேத்ரா த்³விபு⁴ஜான்விதா: |
கிரீடாதி³பூ⁴ஷணோபேதா: ஸர்வாலங்காரஶோபி⁴தா: ||

முன் தலையின் இரு பக்கங்களிலும் அணியும் சங்கசக்ர வடிவமான நெத்திச் சுட்டியும் உடையவளாவாள். வலது கையில் தாமரை மலரும், இடது கையில் பில்வப்பழமும் வைத்திருப்பவளாவாள். அழகிய இடுப்பும் பருத்த பிருஷ்ட பாகமும், அழகிய வஸ்திராலங்காரமும், ஒட்டியாணமும் அரைநூல் மாலையும் அணிந்து, ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் இருப்பவளாவாள்.

ஏகருத்திர-பசுபதி-வஸு-லக்ஷணம்.

ஏகருத்திரன் — பசுபதி — இவர்களை, ஏகாக்ஷருத்திரனுக்குக் கூறிய லக்ஷணப்படியே செய்யவேண்டும்.

தரன், துருவன், ஸோமன், ஆபதேவன், அநலன், அநிலன், பிரத்யூஷன், பிரபாவ(ஸ)ன் என்ற பெயருடைய 8 பேர்களும் வஸுக்கள் எனப்படுவார்கள்.

இவர்கள் சிகப்புநிறம் உடையவர்களாவார்கள். இரண்டு கைகளுடையவர்களாவார்கள். இவர்கள் எல்

பத்வைடகஹஸ்தௌ ச ஸர்வாபரணபூஷிதா: |
கரண்டமகுடோபேதா: ரௌத்ராம்ஶே ச ப்ரகீர்த்திதா: ||

அத² மஹாதேவ த்ரிமூர்த்தி யக்ஷேந்த்ரலக்ஷணம் ||

கர்த்தவ்ய: பஶுபதிவத் மஹாதேவோ விதாநத: |
ஏகருத்ரவத் கர்த்தவ்யஸ்த்ரிமூர்த்திர்விஜாநத: || ௱௨௫ ||

யக்ஷேஶ: ஸர்வயக்ஷாணாம் ஸர்வாபரணபூஷித: |
தப்தகாஞ்சநஸங்காஶ: த்விநேத்ரத்வயஸம்யுத: || ௱௨௬ ||

வரதாபயஹஸ்தஞ்ச கதா வா வாமஹஸ்தகே |
பத்மபீடோபரிஷ்டாச்ச ஸ்திதோ நரவாஹந: || ௱௨௭ ||

லோருமே பீதாம்பரம் உடுத்தியிருப்பவர்களாவார்கள். இவர்கள் உட்கார்ந்த வடிவமாகவோ அல்லது நின்ற வடிவமாகவோ இருப்பதாகும். கைகளில் கத்தியும் கேடயமுமேந்தி இருப்பவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கரண்டமகுடமணிந்து இருப்பவர்களாவார்கள். இவர்கள், பயங்கரமான ரூபமுடையவர்கள். அல்லது ருத்திரனின் அம்சம் படைத்தவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

மஹாதேவ-த்ரிமூர்த்தி-தநத-இந்திர லக்ஷணம்.

மஹாதேவ மூர்த்தியை பசுபதி மூர்த்தியைப்போல செய்யவேண்டும். த்ரிமூர்த்தியை ஏகருத்திரனைப் போல் செய்யவேண்டும்.

ஸகல யக்ஷர்களுக்கும் அதிபனான குபேரன், உலையில் இட்ட தங்கம்போன்ற நிறமுடையவராவார். 2 கைகளும் 2 கண்களுமுடையவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். இருகைகளிலும் அபயமும் வரதமுமுடையவராவார். அல்லது இடதுகையில் கதை வைத்

ரக்தாம்பரதரஶ்சைவ ஶங்கபத்மநிதீயுத: |
ஶங்கபத்மநிதீ தௌ ச பூதாகாரௌ மஹாபலௌ ||

உபவிஷ்டௌ பத்மபீடே து பத்மஹஸ்தௌ விஶேஷத: |
கரண்டமகுடோபேதௌ ஸிதவஸ்த்ரோத்தரீயகௌ ||

தக்ஷிணே [illegible] ஶங்கநிதி: பத்மநிதி: க்ரமாத் |
யக்ஷஸ்ய து வாமே ச தேவீம் குர்யாத் ஸலக்ஷணாம் ||

யக்ஷேந்த்ர லக்ஷணம் ப்ரோக்தம் ப்ராகுக்தம் ப்ரகல்பயேத் |

அத² காலாக்நிருத்ர ஶ்ரீகண்டலக்ஷணம் ||

காலாக்நிருத்ரமூர்தேஸ்து லக்ஷணம் வக்ஷ்யதே(அ)து⁴நா ||
[illegible] ஜ்வாலாவிபூஷித: |

திருப்பதுமாம். பத்மபீடத்தில் இருப்பவராவார். இவருக்கு நரவாகனமாம். (நரவாகனம்-மனிதர்களால் சுமக்கப்படும் பல்லக்கு) இவர் சிகப்பு வஸ்திரமணிந்திருப்பார். சங்கநிதி-பத்மநிதிகளுடன் இருப்பவராவார்.

சங்கநிதி-பத்மநிதி இரண்டுபேரும் பூதம் போன்ற பெரிய உடலும் அதிக பலமுமுடையவர்களாம். கைகளில் தாமரை மலர்களுடன் பத்மபீடத்தில் உட்கார்ந்திருப்பவர்களாகும். வெளுப்புவஸ்திரமுடுத்தி, கரண்ட மகுடம் பூண்டு இருப்பவர்களாம். வலது பக்கத்தில் சங்கநிதியும் இடது பக்கத்தில் பத்மநிதியும் இருப்பதாகும்.

குபேரனின் இடது பக்கத்தில் லக்ஷணத்துடன் தேவி ரூபத்தை அமைக்கவேண்டும். இவ்விதம் குபேரலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

இந்திரனை முன்பு கூறியுள்ளபடியே அமைக்கவேண்டும்.

காலாக்கினி ருத்திர லக்ஷணம்.

காலாக்கினி ருத்திர மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறு

வஜ்ரவேதிகலஶம்யுக்தஃ பத்மாஸனாய ஸுவிக்ரஹஃ வரஃ || ௬௨ ||

ரக்தவஸ்த்ரயுதோ ராஜா ஸர்வாபரணபூஷிதஃ |
ரக்தோர்த்வகேஶஸம்யுக்தஃ ஸிம்ஹாஸனோபரி ஸ்திதஃ ||

அதாதஃ ஸம்ப்ரவக்ஷ்யாமி ஶ்ரீகண்டம் நீலோத்பலஸமப்ரபம் |
கரண்டமகுடோபேதஃ ஸர்வாபரணபூஷிதஃ || ௬௪ ||

அபயவரதோபேதஃ டங்கஶூலதரஃ வரஃ |
ரக்தவஸ்த்ரபரீதானஃ பத்மபீடோபரி ஸ்திதஃ || ௬௫ ||

அத நாகதேவலக்ஷணம் ||

ஶ்ரீகண்டலக்ஷணம் ப்ரோக்தம் நாகதேவஸ்ய சோச்யதே |
த்ரிநேத்ரஞ்ச சதுர்புஜம் ஸௌம்யம் ரக்தாபம் ஸுவிதாம்பரஃ ||

கிறேன். அந்த மூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களு முடையதாகும். தீச்சுடர்போல ஒளியுடன் விளங்குவதாகும். இளம்பிறை சந்திரனும், சிவப்பு ஆடையும் அணிந்து, ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும். சிவப்பு நிறமாய் செங்குத்தாக உயர்ந்த மயிர்களுடன் பயங்கரமான உருவமுடையதாய் ஸிம்ம வாஹனத்தில் வீற்றிருப்பதாகும்.

ஸ்ரீகண்ட மூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களும், நீலோத்பலம்போன்ற நிறமும், உடையதாகும். கரண்ட மகுடமும், ஸகலவித ஆபரணங்களுமணிந்து அபயம்-வரதம்-டங்கம்-சூலம் இவைகளைக் கையிலேந்தி, சிகப்பு வஸ்திரமுடுத்தி, பத்ம பீடத்தில் உட்கார்ந்திருப்பதாகும்.

நாகதேவ லக்ஷணம்.

ஸ்ரீகண்ட லக்ஷணம் இவ்விதம் கூறப்பட்டது. நாக தேவலக்ஷணத்தைக் கூறுகிறேன். நாகதேவர் 3 கண்களும், 4 கைகளும், ஸௌமியமான உருவமும், சிவந்த நிறமும்,

அபயவரதோபேத: பரஹஸ்தே து நாகயுக் |
கரண்டமகுடோபேத: நாக: பஞ்சபணான்வித: || ௱௩௭ ||
ஸர்வாபரணஸம்யுக்த: பத்மபீடோபரி ஸ்தித: |

அத பீம-பூமிலக்ஷணம் ||

பீமமூர்த்திர்பயாகார: சதுர்புஜ: ஸர்வாபரணபூஷித: ||

அபயம் வரதம் சைவ ஶூலம் பாஶம் ச தாரயேத் |
ஸிதவஸ்த்ரபரீதஶ்ச உக்ரத்ருஷ்டி: ஸதம்ஷ்ட்ரக: || ௱௩௯ ||

ஸஸ்யாங்குரநிபா பூமி: நீலாலகஸமந்விதா |
கரண்டமகுடோபேதா ஸர்வாபரணபூஷிதா || ௱௪௰ ||

பீதாம்பரதரா சைவ த்வயோருத்பலதாரிதா |

வெண்மையான உடையும், உடையவராவார். முன் கைகள் அபயவரதமாகவும், பர ஹஸ்தத்தில் ஸர்ப்பத்தை வைத்திருப்பவருமாவார். கையிலிருக்கும் நாகமானது 5 தலைகளுடையதாகும். கரண்ட மகுடமும், ஸகல ஆபரணங்களும் அணிந்து பத்மபீடத்தில் உட்காந்திருப்பவராவார்.

பீம-பூமி-லக்ஷணம்.

பீம மூர்த்தியானது, பயங்கரமான உருவமும் 4 கைகளுமுடையதாம். கொடூரமான பார்வையும் கோரைப்பற்களுமுடையதாகும். வெளுப்பு ஆடையுடுத்தி வரதம்-அபயம்-சூலம்-பாசம்-இவைகளை ஏந்தி, ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பதாகும்.

பூமிதேவியானவள் பயிரின் முளைபோன்ற நிறமும், அழகிய முகமும், நீலமான முன்னுச்சியும், பீதாம்பர ஆடையுமுடையவளாவாள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, கரண்ட மகுடம் தரித்து, இரு கைகளிலும்,

𑌪𑌦𑍍𑌮𑌂 𑌵𑌾𑌪𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌲𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌹𑌸𑍍𑌤𑌯𑍋𑌰𑍍𑌦𑌕𑍍𑌷𑌵𑌾𑌮𑌯𑍋𑌃 ॥

𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌤𑍁 𑌆𑌸𑍀𑌨𑌾 𑌵𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌥𑌵𑌾 ।

𑌅𑌥 𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌿 - 𑌮𑌰𑍁𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑍀 𑌕𑌞𑍍𑌜𑌨𑌾𑌭𑌸𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௱௪௨ ॥

𑌖𑌡𑍍𑌗𑌖𑍇𑌟𑌕𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌿𑌤𑌃 ।
𑌮𑌰𑍁𑌦𑍍𑌗𑌣𑌾 𑌧𑍂𑌮𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌾𑌃 ॥

𑌰𑌕𑍍𑌤𑌪𑌟𑍍𑌟𑌾𑌮𑍍𑌬𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌢𑍍𑌯𑌾 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌮𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌃 ॥

𑌟𑌙𑍍𑌕𑌶𑍂𑌲𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌸𑌂𑌵𑍃𑌤𑌾𑌃 ।
𑌪𑌾𑌦𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑍂𑌲𑌾 𑌹𑍍𑌯𑍂𑌰𑍁𑌪𑍃𑌷𑍍𑌠𑌸𑍍𑌥𑌲𑌾𑌃 ॥

இரண்டு தாமரை மலர்களையாவது, இரண்டு நீலோத்பலங்களையாவது வைத்திருப்பவளாவாள். பத்மபீடத்தில், உட்கார்ந்த வடிவமாகவோ, நின்ற வடிவமாகவோ இருப்பவளாவாள்.

சிகண்ட-மருத்-லக்ஷணம்.

சிகண்டர் என்ற மூர்த்தியானது, கஞ்சன (மைனு) பக்ஷியைப்போன்ற நிறமும், 4 கைகளும், கைகளில் கத்தி-கேடயம், இரண்டையும் ஏந்தி பத்ம பீடத்திலிருப்பதாகும். (மற்ற 2 கைகள் வரதாபயமாகக் கொள்ளவேண்டும்.)

மருத்துக்கள் புகை நிறமும், 2 கைகளும், முத்கரம் என்ற ஆயுதமும், சிகப்புப்பட்டாடையும், முடிந்த முடியும், உடையவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, பலவித புஷ்பங்களையும் தரித்து, டங்கம் சூலம் இவைகளை ஏந்தி, பாத பீடத்திலிருப்பவர்களாவார்கள். இவர்களுக்குத் துடை-பிருஷ்டபாகம் - ஸ்தநம்-இவைகள் பெரிதாக இருப்பதாகும்.

𑌅𑌥 𑌉𑌗𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

𑌅𑌥 𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

உக்கிர லக்ஷணம்.

உக்கிர மூர்த்தியானது சிகப்பு உடையணிந்து, பயங்கரமான தோற்றமுடையதாகும். 4 கைகளும், கைகளில் அபயம்-வரதம்-சங்கம்-சூலம்-இவற்றைத்தரித்து, கரண்ட மகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்து, பத்ம பீடத்தில் ஸ்தானகமாக இருப்பதாகும்.

இந்த மூர்த்தியானது வெளுப்பு நிறமுடையதாய், வெளுப்பு உடை தரித்திருப்பதுமாகும்.

சனைச்சர லக்ஷணம்.

சனைச்சரன் கருப்பு நிறமும், 2 கைகளும், கருப்பு உடையுமுடையவராவார். கரண்ட மகுடம் தரித்து, எல்லா ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். வலது கையில் தண்டமும், இடது கையில் வரதமுமிருப்பதாகும். பத்ம பீடத்தில் நின்ற வடிவமாகவோ, விசேஷித்து உட்கார்ந்த வடிவமாகவோ இருப்பதாகும். சிறிது வளைந்த காலும்,

ஏவம் லக்ஷணஸம்யுக்தம் பீட²ஸ்ய லக்ஷணம் ஶ்ருணு ||

அத² பீட²லக்ஷணம் ||

சதுர்த³ஶாங்கு³லாயாமம் த்³வாத³ஶாங்கு³லமுச்ச்²ரிதம் |
உச்ச்²ராயம் த்ர்யம்ஶமம்ஶேன மேக²லாத்ரிதயம் க்ரமாத் ||
வேதா³(மேக²ல)வேதா³ங்கு³லோத்ஸேத⁴ விஸ்தாரம் ததா²
வேதா³ங்கு³லம் |
ஷட³ங்கு³லம் பத்³மதாரம் ஶேஷார்த⁴மம்ஶம் கம்ப²நீவ்ரகம் ||
ஶிலாபி⁴ரிஷ்டகாபி⁴ர்வா ஸுத⁴யா வா ப்ரகல்பயேத் |
பரிவாரபீட²மேவம் மஹாபீட²விதி⁴ம் ஶ்ருணு || ௱௩௩ ||

அத² மஹாபீட²லக்ஷணம் ||

ப்ராஸாத³ஸ்ய து விஸ்தாரம் பஞ்சஸப்ததா⁴ம்ஶகே |
த்ரிபா⁴கே³ஸ்தம் மஹாபீட²ம் ஷட்ஷ்ட்யம்ஶாந்தகே || ௱௩௪ ||

சிறிது குட்டையான உடலுமுடையவராவார். இவ்விதம் பரிவார லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி பீட லக்ஷணத்தைக் கேட்பாயாக.

பீட லக்ஷணம்.

பீடமானது, 14 அங்குலம் அகலமும், 12 அங்குலம் உயரமுமுடையதாக இருக்கவேண்டும். உயரத்தை 3 பாகங்களாகக்கொண்டு, மேகலை ஒன்று, 4 அங்குல உயரமும் 4 அங்குல அகலமுமிருக்கும்படி, 3 மேகலையுடையதாக அமைக்கவேண்டும். அதன் (மத்தியில்) பத்மத்தின் அகலம் 6 அங்குலமாகும். பாக்கி ½ பாகமானது கம்பத்தின் நீவ்ரம் (ஒதுக்கம்) ஆகும். பீடமானது, கருங்கல்–செங்கல்–அல்லது ஸுதை இவைகளால் செய்யப்படவேண்டும். இவ்விதம் பரிவாரங்களின் பீடம் கூறப்பட்டுள்ளது. இனி மஹா பீடவிதியைக் கூறுகிறேன். கேட்பாயாக.

[illegible] ।
[illegible] ॥ ௫௫ ॥

[illegible] ।
[illegible] ॥ ௫௬ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௫௭ ॥

மஹாபீட லக்ஷணம்.

இவ்விடத்தில் கர்பகிருஹத்தின் அகலமானது தண்டம் என்று கூறப்பட்டிருக்கிறது

மஹாபீடமானது, கர்பகிருஹத்திலிருந்து, 6-8-10-12-14-16 அல்லது 18 தண்ட அளவில் கல்பிக்கப்படவேண்டும்

அல்லது மற்றொரு முறையின்படியும் வைக்கலாம். பிராகாரத்தின் மூன்றாவது, நான்காவது அல்லது ஐந்தாவது சுவற்றின் (உட்பக்கத்தில்) அதாவது 2-3-4வது பிராகாரத்தில் முன்பக்கத்தில் அதன் நீளத்தின் நடுவில் வைப்பதுமாகும்.

இவ்விதம் மஹா பீடஸ்தானம் கூறப்பட்டுள்ளது. இனி அதன் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

பீடமானது, கர்பகிருஹ துவாரத்தின் உயரம் எவ்வளவோ அவ்வளவு அகலமிருப்பது உத்தமமாகும். அதில் ¾ பங்கு அகலமிருப்பது மத்யமமாகும். ½ பங்கு அகலமிருப்பது அதமமாகும்.

பீடமானது, கர்பகிருஹ துவாரத்தின் அகலம் எவ்வளவோ அவ்வளவு அகலமிருப்பது அதமமாகும். அதைப்

த்விமாத்ரம் மத்யமம் ப்ரோக்தம் த்ரிமாத்ரம் ச்ரேஷ்டமுச்யதே |
அதவா ஏகஹஸ்தம் ஸ்யாததமம் ஸம்ப்ரகீர்த்திதம் || ௱௫௯ ||

த்விஹஸ்தம் து மத்யமம் ஸ்யாத் த்ரிஹஸ்தம் ச்ரேஷ்டமுச்யதே |
தத்விஸ்தாரஸமம் துங்கம் ஸப்தாஷ்டநவபாகத: (வேதிகா) ||

உபானோச்ச்ரயம் த்விபாகம் ஸ்யாத் ஷட்பாகம்(பஞ்சாம்)
சம் ஜகதீ பவேத் |
குமுதோச்சம் து பஞ்சாம்சம்(வேதாம்சம்) கம்பமேகாம்ச-
முச்யதே || ௱௬௧ ||

வேதாம்(ஸ்ருத்யம்)சம் கர்ணோத்ஸேதம் ஸ்யாதூர்த்வகம்பம்
ஏகாம்சகம் |
மஹாபட்டிமாத்ராம்சம் து த்விபாகம் வா விசேஷத: ||

வேதாம்சம் பத்மதுங்கம் து த்விபாகம் கண்டகோதயம் |

போல் 2 பங்கு அகலமிருப்பது மத்தியமமாகும். 3 பங்கு அகலமிருப்பது உத்தமமாகும்.

அல்லது 1 ஹஸ்தம் அகலமிருப்பது அதமமாகும். 2 ஹஸ்தம் அகலமிருப்பது மத்தியமமாகும். 3 ஹஸ்தமிருப்பது உத்தமமாகும்.

பீடமானது அதன் விஸ்தாரம் எவ்வளவோ அவ்வளவு உயரமுடையதாகும்.

அதன் உயரத்தைப் பங்கிட்டு, 3 வேதிகளையும் முறையே 7–8–9 பங்குகளாகக் கொள்ளவேண்டும்.

(பீடத்தின் உயரத்தில்) உபானம் 2 பங்காகும். ஜகதீ 6 (5) பங்காகும். குமுதத்தின் உயரம் 5 (4) அம்சமாகும். கம்பம் 1 பங்காகும். கர்ணம் 4 (3) பங்காகும். ஊர்த்துவ கம்பம் 1 பங்காகும். மஹாபட்டி 3 பங்காகும்; அல்லது விசேஷித்து 2 பங்கு இருப்பதுமாகும். பத்மத்தின் உயரம்

ஸப்தவா கர்ணிகோத்ஸேதம் பாகேநைவ விசாலத: || ௱௩௩ ||

பத்மாத்ரம் பஞ்ச(வேதா)பாகம் து ஸோபாநம் விபாகத: |
உபாநாத்ரம் ப்ரிவாம்ஸம் து ஶேஷம் பூர்வவதேவ ஹி ||

அத பீடபத்மம் வித்யா(ய)பாதகும்ப(ம)தோர்த்வத: |
தத்ரோத்ஸேதே பத்மாந்தம் து பீடோத்ஸேதம்(தயா)ஸ
மாசரேத் || ௱௩௫ ||

அதிஷ்டாநோக்தமார்கேண மேகலாதீநிநாதகேஸ் |
பத்மாதிபாகமாம்ஸம் வா ஸப்தாம்ஸம் கர்ணிகா தத: ||

பத்மாநாம் பாகமாநம் வா வ்ருத்தம் வாஷ்டாஸ்ரமேவ வா |

---

4 பங்காகும். கர்ணிகையின் உயரம் 2 பங்காகும். ஆகக் கூடுதல், 2+5+4+1+3+1+3+4+2=24 அம்சமாகும்.

(பீடத்தின் உயரத்தை 24 பாகங்களாகச் செய்து கொண்டு, உபானம் முதலான 9 பிரிவுகளையும், கூறிய பங்குகளால் அமைக்கவேண்டும் என்பது பொருள்)

அல்லது, கர்ணிகை 3 பாகம், பத்மம் 5 (4) பாகம், மஹாபட்டி 2 பாகம், உபானம் 1 பாகம், மற்றவைகள் கீழே கூறப்பட்டிருப்பதுபோலவும் கொள்வதாகும்.

அல்லது, பீடத்தின் உயரத்திற்குக் கீழே பூமட்டத்திற்குக் கீழே தாமரை மலரின் அடிப்பக்கமாகக்கொண்டு, பூமட்டத்திற்குமேலே பீடத்தின் உயரம் முழுமையும் பத்மத்தின் பாகமாகக் கொள்வதுமாகும். அதிஷ்டானத்திற்குக் கூறியபடி, மேகலைவரையிலுள்ள மேசகீஷ்கிராந்தம் செய்யவேண்டும் கர்ணிகையின் அகலம் பத்மத்தின் அகலத்தில் 4 அல்லது 5ல் ஒரு பாகமாகும்.

பத்மத்தின் அகலமானது, சதுரஸ்ரமாகவாவது அஷ்டாஸ்ரமாகவாவது, வட்டவடிவமாகவாவது, ஷடஸ்

பத்மாஸ்த்ரவாயுக்தஹேஷ்டம் ... ஹம்ஸதார்க்ஷ்யைஸ்ஸஜுஷ்டம் ॥ ௧௯௭ ॥

[சதுஷ்ஷட்டஷ்டதளம் பத்மம் பீடாகாராக்ருதிஸ்திதம் ।]

லோஹஜம் ஶைலஜம் வாபி இஷ்டகாஸம்பவம் து வா ।

ஸுதயா வேஷ்டகாயுக்தம் நானாசித்ரைர்விசித்ரிதம் ॥

பூதேவீமகரவ்யாலைர் வ்ருஷபைஶ்ச விபூஷிதம் ।

நானாவர்ணைர்விசித்ரம் வா ஹேமரௌப்யவிபூஷிதைஃ ॥

பீடவ்யாஸே து ஷட்ஸப்தாஷ்டநவாம்ஶகேன வா ।

உபபீடோக்தமானேன வா பீடமேவ ப்ரகல்பயேத் ॥ ௧௭௮ ॥

வடிவமாகவாவது, அமையப்பெற்று, அன்னம்-கருடன் இவைகளால் அலங்கரிக்கப்பட்டுமிருக்கவேண்டும். (பத்மமானது, பீடத்தின் வடிவத்திற்கேற்ப, 4, 6 அல்லது 8 இதழ்களைக்கொண்டதாக இருக்கவேண்டுமென்பது பொருள்.)

பீடமானது, உலோகம்-கருங்கல்-செங்கல்-உட்பகுதியில் செங்கலுடன் கூடிய ஸுதை, இவைகளால் செய்யப்படவேண்டும். பலவித சித்திரங்களாலலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். பூதேவி-மகரம்-வியாளம் (ஸர்ப்பம்) விருஷபம் இவ்வுருவங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். பலவித வர்ணங்கள் தீட்டப்பட்டிருக்கவேண்டும். தங்கம் வெள்ளி இவைகளால் பூஷிக்கப்பட்டிருக்கவேண்டும்.

பீடத்தின் அகலத்தில் 6-7-8-9 அம்சத்தினாலாவது, உபபீடத்திற்குக் கூறப்பட்ட அம்ச அளவினாலாவது பீடத்தைச் செய்யவேண்டும். (இந்தக் கணக்கு பீடத்தின் கீழ்பாகத்திற்குக் கூறியதாகக் கொள்ளவேண்டும்.)

ததூர்த்வே து மஹாபீடம் பூர்வோக்தவ்யாஸோதயாந்விதம் |
உபபீடோக்தவத் ஸர்வம் கர்தவ்யம் வா விசக்ஷணை: || ௱௭௧ ||

ஆமோதம் ச பூர்வபத்ரே து ப்ருதிவீதத்த்வரூபிணம் |
ப்ரமோதம் ச யாம்யபத்ரே து அக்நிதத்த்வாத்மகம் || ௱௭௨ ||

ஸுமுகம் பஸ்சிமபத்ரே து ஜலதத்த்வாத்மகம் |
துர்முகம் சௌம்யதிக்பத்ரே வாயுதத்த்வாத்மகம் ததா |

அவிக்நம் கர்ணிகாயாம் து வ்யோமதத்த்வஸ்வரூபிணம் |
தாமஸம் ச ஆக்நேயதளே ராஜஸம் நைர்ருதே தளே ||

ஸாத்விகம் வாயவ்யதிக்பத்ரே விக்நகர்தாரமீசகே |

அதற்குமேலே, மஹாபீடத்திற்குக் கூறப்பட்ட அ வுடன் மஹாபீடத்தைச் செய்யவேண்டும். அந்த பீட தின் மேல்பாகத்தையும் உபபீடத்திற்குக் கூறப்பட் அளவின்படியேயும் செய்யலாம்.

பூதத்துவஸ்வரூபியான ஆமோதரை கிழக்கு திக் லுள்ள தளத்திலும், அக்நிதத்துவ ஸ்வரூபியான ப் மோதரை தெற்கு திக்கிலுள்ள தளத்திலும், ஜலதத்து ஸ்வரூபியான ஸுமுகரை மேற்கு திக்கிலுள்ள தளத்திலு வாயுதத்துவ ஸ்வரூபியான துர்முகரை வடக்கு திக்கிலுள் தளத்திலும், ஆகாசதத்துவ ஸ்வரூபியான அவிக்ந கர்ணிகையின்மேலேயும், (கர்ணிகை—தாமரை மலரி இதழ்களின் நடுவிலுள்ள பாகம். இங்கு கர்ணிகை என்ப பீடத்தின் மேல்தளமாகும்.) அக்கினி மூலையிலுள்ள தள தில் தமோகுணத்தையும், நைர்ருதி மூலையிலுள்ள தளத்தி ராஜஸ குணத்தையும், வாயு மூலையிலுள்ள தளத்தில் ஸ த்வ குணத்தையும், (குணங்கள் என்பதற்கு குணங்களி அதிதேவதைகள் என்று பொருள் கொள்ளவேண்டு ஈசான மூலையிலுள்ள தளத்தில் விக்ந கர்த்தாவை

ஏவம் மஹாபூதகுணாகாரஸாத்தத்வஸ்வாஹார்யதஃ || ௱௭௫ ||

ஸ்வர்கம் பூமிரந்தரிக்ஷம் ஸர்வம் பூதகுணாத்மகம் |
ஆத்மேத்யுக்தம் து தத்ஸர்வம் மஹாபீடம் த்விஜோத்தம || ௱௭௬ ||

தாமஸாதிநிவ்ருத்த்யர்த்தம் நித்யம் ஸம்பூஜ்ய பலிம் க்ஷிபேத் |
தாதாத்மாவஹனாய நித்யோத்ஸவைஃ ப்ரதக்ஷிணம் ||

[தஸ்மாதாத்மாவஹனாய நித்யம் குர்யாத் ப்ரதக்ஷிணம் |]
ப்ரதமம் ப்ரதக்ஷிணம் பூமௌ ச த்விதீயம் ஹ்யந்தரிக்ஷகம் |
த்ருதீயம் ப்ரதக்ஷிணம் ஸ்வர்காக்யம் க்ருதம் ததாவிநாம் ஹிதம் ||

(பூஜிக்கவேண்டும்.) ஆத்தும தத்துவமானது இவ்விதம் மஹாபூத குணங்களால் ஆகியது என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸ்வர்கம், பூமி, அந்தரிக்ஷம் (ஸ்வர்க்கத்திற்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள இடம்) இவை யாவும் ஸகல பூதங்களாலும் குணங்களாலும் அமையப்பெற்றதாகும். ஹே அந்தணனே! ஆத்துமா என்று கூறப்படும் எல்லாம் மஹாபீடமேயாகும். (மஹாபீடமானது ஸர்வாத்தும ஸ்வரூபமாகும் என்பது பொருள்.) தாமஸாதி குணங்கள் நிவர்த்தியடைவதற்காக, தினந்தோறும் (பீடத்தை) பூஜித்து கடைசியில் பலிகொடுக்கவேண்டும்.

அத்தகைய ஆத்மஸ்வருபத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் பொருட்டு (பீடத்தை) நித்தியோத்ஸவாதிகளுடன் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். (ஆகையால் ஆத்துமார்ப்பணம் செய்யும் பொருட்டு தினந்தோறும் பீடத்தைப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.)

முதல் பிரதக்ஷிணத்தால் பூமியை வலம் வந்ததாகும். இரண்டாவது பிரதக்ஷிணத்தால் அந்தரிக்ஷத்தை (ஆகாசத்தை) வலம் வந்ததாகும். மூன்றாவது பிரத

𑌉𑌤𑍍𑌪𑌾𑌤𑌾𑌦𑌿 [illegible] 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
[illegible] ॥

𑌵𑍃𑌷𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌚 𑌕𑍁𑌮𑌾𑌰𑍇 𑌵𑍃𑌷𑌭𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
[illegible] 𑌶𑍇𑌷𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ [illegible] ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍇 𑌶𑌿𑌲𑍍𑌪𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌅𑌷𑍍𑌟𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

க்ஷிணத்தால் ஸ்வர்க்கத்தை வலம்வந்ததாகும். இது அந்த தேசத்தில் வசிப்பவர்களுக்கு நன்மையையுண்டுபண்ணும். உலகத்தின் துன்பத்தை நீக்கவேண்டி, தேவாலய நிர்மாணம் செய்பவன், இவ்விதம் பீடத்தை நிர்மாணஞ்செய்ய வேண்டும்.

இனி, மேற்கு முகமான தேவாலயத்தில் சிறிது மாறு பாட்டைக் கூறுகிறேன்.

விருஷபத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தில் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும், ஸுப்ரஹ்மண்யரை வைக்கவேண்டியவிடத்தில் விருஷபத்தையும் மாற்றி யமைக்கவேண்டும். மற்றவைகள் முன்பு கூறியுள்ள விதிப் படியேயாகும்.

இவ்விதம் பரிவாரவிதி கூறப்பட்டுள்ளது. இனி லிங்க லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

காச்யப சில்ப சாஸ்திரத்தில் பரிவாரவிதியெனும்
48வது படலம் முற்றும்.

𑌏𑌕𑍋𑌨 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥



𑌶𑌿𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌶𑌿𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌸𑌂𑌸𑌾𑌰 𑌵𑌿𑌲𑌯𑍇 𑌭𑍂𑌤𑌾𑌃 𑌲𑌯𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ ௧ ॥

𑌯𑌥𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌥𑌯𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑌨𑍋𑌵𑌾𑌚𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑌮𑍍 ॥ ௨ ॥

𑌆𑌤𑍍𑌮𑌾𑌤𑍀𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 𑌪𑌾𑌶𑌂 𑌵𑌿𑌨𑌾 (𑌹𑌿𑌤𑌕𑌮𑍍) ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌦𑍍𑌗𑍂𑌢𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌕𑌨𑌾𑌯𑌕𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑍈 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ।

நாற்பத்தி ஒன்பதாவது படலம்.

சிவலிங்க லக்ஷணம்.

இனி சிவலிங்கத்தின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். ஆக்கமும் அழிவுமாகிய ஸம்ஸாரமானது லயத்தை அடையும்பொழுது, பூதஜாலங்கள் யாவும் ஸ்ருஷ்டி காலத்தில் எவ்வாறு தோன்றினவோ, அவ்வாறே லயத்தை அடைகின்றன. சிவலிங்கமானது அவைகளைப் படைக்கும் தன்மை வாய்ந்ததாகையால் அதற்கு லிங்கம் என்று பெயர்.

நிஷ்கலமாயும், சாந்தமாயும், மனதிற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டதும், ஆத்மாவுக்கும் அப்பாற்பட்டதுமான அதுவே, ஸம்ஸார சக்கிரத்தில் உழலும் ஸகல பூதஜாலங்களுக்கும் முக்தியைக் கொடுக்கும் தன்மைவாய்ந்ததாம்.

அதுவே, எல்லாவற்றிலும் வியாபித்து, அவைகளுள் மறைந்து, ஸகல உலகங்களுக்கும் நாயகனாக விளங்குகிறது. அதனிடமிருந்து ஸ்ருஷ்டி காலத்தில் சாந்தி தத்துவமுண்டாயிற்று.

[illegible] ||

[illegible] |

[illegible] ॥ ௫ ||

[illegible] |

[illegible] ॥

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

அந்த சாந்தி தத்தவத்திலிருந்து சக்தி தத்துவம் தோன்றிற்று. அதிலிருந்து நாதம் தோன்றிற்று. நாதத்திலிருந்து பிந்து தோன்றிற்று. அந்த நாதமே ஸத் என்று கூறப்படுகிறது. பிந்துவானது, மனோன்மனீ என்று கூறப்படுகிறது. அதிலிருந்து ஈசுவரன் தோன்றினன். ஈசுவரனிடத்திலிருந்து மஹேசுவரன் தோன்றினன். மஹேசுவரனிடத்திலிருந்து விஷ்ணு தத்துவம் உண்டாயிற்று. (விஷ்ணு தோன்றினர்.) விஷ்ணுவிடமிருந்து பிரம்ஹா உண்டானர். அந்த பிரம்ஹாவிடமிருந்து, 3-30-300-3000, என்று முறையே விசேஷித்து, தேவர்களும் இருடிகளும் தானவர்களும் ரஸத்தின் வழியே யுண்டாகும் பற்பல ஜீவராசிகளும் (அஸுரர்களும்) உண்டானர்கள். ஹே அந்தணனே! உலகத்தின் உத்பத்தியானது இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இவைகளில் முதலில் கூறப்பட்ட லிங்கம், சாந்தி, சக்தி, என்ற மூன்றும் நிஷ்களமாகும். (உருவற்றதும் விவரித்துக்கூற முடியாததுமாகும்.)

சிவமானது ஸகலம் எனப்படும். நாதம், பிந்து

𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌶𑌿𑌵𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 || ௧௬ ||

[illegible] |
[illegible] || [illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ([illegible])
[illegible] || [illegible] ||

இரண்டும் மிச்ரம் எனப்படும். நாதமே லிங்கவடிவம் என்றும், பிந்துவே அதன் பீடமென்றும் கூறப்பட்டிருக்கிறது. லிங்கமானது சிவஸ்வரூபமாகும். பீடமானது சக்திஸ்வரூபமாகும். லிங்கமும் பீடமும் சேர்ந்து ஒன்ருகவே இருப்பதால், நெருப்பும் உஷ்ணமும் சேர்ந்து ஒன்ருக இருப்பதுபோல, ஶிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்ருகவே விளங்குகின்றது.

ஸத்பாவமானது, உலகத்தின் தீமைகளைப் போக்கி ஸகல பிராணிகளுக்கும் நன்மையைக் கொடுப்பதற்காகவும், தேவாதிகளான ஸகலஜீவராசிகளும் நன்மையையடைவதற்காகவும், (அவர்கள்) தியாநம் பூஜை முதலியவைகளைச் செய்யவேண்டியதற்காகவும், லிங்கம் யோநி என்ற பாகுபாடுடன் விளங்கலாயிற்று.

(தேவாதிகளான ஸகல ஜீவராசிகளும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்ற புருஷார்த்தங்கள்) எல்லாவற்றையும் அடையும்பொருட்டு, லிங்கலக்ஷணத்தைக் கூறுகிறேன்.

அந்த லிங்கமானது, சலம், அசலம், சலாசலம், என்று

லிங்கம் து வ்ருத்தம் வா யோநிம் க்ருத்வா (காரயேத்)
ஸலக்ஷணம் |

ஶிரோவர்த்தநஸம்யுக்தம் லக்ஷணோச்சாரவர்ஜிதம் ||

லிங்காகாரஸமம் த்ரவ்யம் க்ருத்வா லிங்கமாதாய யோஜயேத் |

* உச்சே ஸப்தாம்ஶகே(ஷு) வா வேதாம்ஶம் பஞ்சாம்ஶமேவ வா ||

பீடே நிவேஶ்ய ஶேஷம் த்ருஶ்யமானஸம்ஸ்திதம் |

மூன்று வகையாகும். அந்த லிங்கத்தை முறையே விசே ஷித்து யோனியுடன் (யோனி – பீடம்) ரத்னத்தினுலாவது (ஸ்வர்ணம் முதலிய) லோஹத்தினுலாவது அமைக்க வேண்டும். லிங்கமானது எந்த திரவியத்தால் செய்யப் படுகிறதோ, அந்த திரவியமல்லாத வேறு திரவியத்தினுலும் யோனியைச் செய்யலாம். ஆனல் அது லக்ஷணத்துடன் இருக்கவேண்டும்.

லிங்கமானது, லக்ஷணம் பொருந்தியதாக இல்லாவிட டாலும் சிரோவர்தனமுடையதாக இருக்கவேண்டும் (சிரோவர்த்தனம் — லிங்கத்தின் முகமட்டத்திற்குமேல் குடை போன்று உயர்ந்து வட்டமாக இருக்கும் சிர பாகம்)

லிங்கத்தின் உருவத்தை முழுமையும் செய்து, லிங்க தின் உயரத்தில் ஸரிபாதி அளவாவது, லிங்கத்தின் உயர தில் 7-ல் 4 பாகமாவது, அல்லது 7-ல் 5 பாகமாவது பீடத்திற்குள் பதிந்திருக்கும்படி வைக்கவேண்டும். அ நீங்கிய பாகமானது பீடத்திற்கு மேலே காணப்படுவதா இருக்கவேண்டும்

---

* உச்சே த்ர்யம்ஶகம் வா வேதாம்ஶம் பஞ்சாம்ஶமேவ வா |
இதி பாடாந்தரம் |

உயரத்தில் 3ல் 1 பாகமாவது, 4ல் 1 பாகமாவது, என்ப மற்ருெரு பாடம்.

गमागमक्षमं चेष्टदेशे न्यासोद्धारैः क्षमम् ॥

यत्तु लिङ्गं चलं ख्यातं देवागारस्थमचलम् ।
स्थापितं चैव यस्मिन् पीठे देवागारस्थं चलाचलम् ॥

स्वयंजं सूत्रसंयुक्तं बाणलिङ्गं तदीरितम् ।
तेष्वादावचलं लिङ्गलक्षणं वक्ष्यतेऽधुना ॥ १७ ॥

सन्मासे तिथिनक्षत्रलग्नवारे शिलाग्रहः ।
आचार्यः शि[illegible]ल्पिसंयुक्तः शिलाग्रहणमाचरेत् ॥ १८ ॥

இஷ்டமான எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லக் கூடியதாகவும் இஷ்டமான இடத்தில் வைக்கவும் எடுக்கவும் தகுதிவாய்ந்ததுமான லிங்கமானது, சல லிங்கம் எனப் படும்.

அதற்கு உரிய தேவாலயத்தில் காணப்படுவதும், இருக்குமிடத்திலிருந்து அசைக்கமுடியாதபடி ஸ்திரமாக பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான லிங்கமானது, அசல லிங்கம் எனப்படும்.

உரிய இடத்தில் ஸ்திரமாக இருப்பதுபோல் காணப் படுவதும், பீடத்தில் வைக்கவும், அதனின்றும் தனித்து எடுக்கவும் கூடியதுமான லிங்கமானது, சலாசல லிங்கம் எனப்படும். (17)

தானாகவே லிங்காகாரத்தை அடைந்து ஸூத்திரத் துடன் கூடியதாய் காணப்படும் லிங்கத்தை, பாணலிங்கம் என்று கூறுகிறார்கள்.

இத்தகைய லிங்கங்களில் அசலலிங்க லக்ஷணத்தை முதலில் கூறுகிறேன். (18)

நல்ல மாதத்தில் நல்ல திதியில், நல்ல நக்ஷத்திரத்தில், நல்ல லக்கினத்தில், நல்ல வாரத்தில், சிலாஸங்கிரஹணம் செய்யவேண்டும். ஆசார்யனானவன் சில்பியுடன் கூடச்

[illegible] ।
[illegible] ॥ ௨௰ ॥

[illegible]
[illegible] ।
[illegible] ॥ ௨௧ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௨௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௨௩ ॥

சென்று, சிலாஸங்கிரஹணம் செய்யவேண்டும். அவன், சிலாஸங்கிரஹணத்திற்குப் புறப்படும் பொழுதும், மார்கத்திலும், சிலாஸங்கிரஹணம் செய்யும்பொழுதும், தெய்வச்செயலாக ஏற்படும் நிமித்தங்களையும், ஆகாச வெளியில் காணப்படும் நிமித்தங்களையும், பூமியில் காணப்படும் நிமித்தங்களையும் கவனித்துப்பார்க்கவேண்டும்.

காக்கையானது இடது பக்கத்திலிருந்து வலமாக வருவது, பருந்து வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வருவது, மாம்ஸத்துடன்கூடிய கழுகு, கன்னிகை, பசு இவைகளைக் காண்பது, பசுக்கள் எதிரில் வருவது, தயிர் நிறைந்த குடம், பால் நிறைந்த குடம், மலர்ந்த மலர்கள், புஷ்பமாலை, குழந்தைகளுடன் கூடிய ஸ்திரீகள், சோறு, மாம்ஸம், உணவுப்பொருள், சிவபக்தி நிறைந்தவன், ஜ்வாலையுடன் கூடிய நெருப்பு, ஜலம் நிறைந்த குடம், அலங்காரம் செய்யப்பட்ட யானை, மிகவும் அழகுடன்கூடிய வேஸ்யை (தாஸி)

உல்காபாதோ திக்தாஹ: மஹாவாதவேகத: |
அந்தரிக்ஷாண்யஶுபாநி பூமௌ வக்ஷ்யாம்யத: பரம் ॥ ௨௫ ॥

முக்தகேஶா நரா நார்ய: கீர்ணகேஶாஸ்ததைவ ச |
தைலாப்யக்தாஸ்து நக்நாஸ்து காஷாயவஸநாந்விதா: ॥ ௨௬ ॥

ஶூந்யம் சைவாய ம்ருத்பாண்டம் தைலபாத்ரம் ததைவ ச |
சிந்நநாஸிககர்ணாஸ்து ஹீநாங்காஸ்த்வதிகாங்ககா: ॥ ௨௭ ॥

வந்த்யாஸ்த்ரீ நாதஹீநா நார்ய: விதவா ச ததைவ ச |
பஹ்வாஹாரஸ்த்வஶுபாநி பூதாநி வர்ஜயேச் சுபகர்மஸு ॥

இவைகளைக் காண்பதும், இவைகள் எதிரில் வருவதும் பூமியில் நிகழும் சுப சகுநங்களாகும்.

இவைகளுக்கு மாருகக் காணப்படுகின்றவைகள் அசுப சகுநங்களாகும். (24)

கொள்ளிக்கட்டை விழுவது, திக்குகள் எரிவது, பெருங் காற்றடிப்பது, இவைகள் அந்தரிக்ஷத்தில் உண்டாகும் அசுபங்களாகும். (அந்தரிக்ஷம் — ஆகாசம்) இனி பூமியில் காணப்படும் அசுப சகுனங்களைக் கூறுகிறேன்.

அவிழ்ந்த கூந்தலையுடைய ஸ்திரீகள், ஆண்கள் விரிந்த கூந்தலையுடைய ஸ்திரீகள் புருஷர்கள், எண்ணை தேய்த்துக் கொண்ட ஸ்திரீ புருஷர்கள், துணி அணிந்துகொள்ளாமல் நக்நமாக இருப்பவர்கள், காஷாயவஸ்திரம் உடுத்தியவர்கள், ஒன்றுமில்லாமல் சூந்யமாக இருக்கும் மண்பாண்டம், எண்ணையுடன் கூடிய பாத்திரம், மூக்கு, காது முதலிய அங்கங்கள் அறுபட்டவர்கள், அங்கம் குறைந்தவர்கள், அதிக அங்கமுடையவர்கள், பிள்ளை பெருத ஸ்திரீகள், கணவனை இழந்த விதவைகள், அளவு கடந்து அதிகமாக ஆஹாரம் செய்பவன், இவைகள் பூமியில் காணப்படும் அசுப சகுநங்களாகும். இத்தகைய அசுப சகுநங்களைச் சுபகாரியங்களில் விலக்கிவிடவேண்டும். (28)

[illegible]

சுபசகுனங்கள் காணப்பட்டால் புறப்பட்டுச்செல்ல வேண்டும். அசுபசகுனங்கள் காணப்பட்டால் பிரயாணத்தை நிறுத்திவிட வேண்டும்.

அசுபசகுனங்கள் காணப்பட்டால், அக்கினியை வளர்த்து, அதில் ஸமித்து, அன்னம், ஆஜ்யம் (நெய்) இவைகளால், சிவ (பஞ்சாக்ஷர) மந்திரத்தினால் 100 தடவை ஹோமம் செய்து பயத்தம்பருப்பிட்ட பொங்கலை நிவேதனம் செய்து, நாகபூஜையுடன் பரமேசுவரனை வணங்கிவிட்டு, பிறகு, ஆசார்யனானவன் சில்பியுடன் சிலாஸங்கிரஹணத்திற்கு புறப்பட்டுச் செல்லவேண்டும். (30)

சில்பியானவன், மலை, ஸமுத்திரம், புண்யதீர்த்தம், புண்யக்ஷேத்திரம், காடு இவ்விடங்களில், பாலுள்ள மரத்தின் பக்கத்திலும் தேவாலயத்தின் பக்கத்திலும் நதிக்கரையிலும் குளக்கரையிலும் இருக்கும் சிலையை எடுக்க வேண்டும். மற்றவிடங்களில் சிலாஸங்கிரஹணம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால், அதனால் அழிவு உண்டாகும். (32)

ஶ்வேதா ரக்தா ச பீதா ச க்ருஷ்ணா சைவ சதுர்விதா |
கோக்ஷீரஶங்ககுந்தேந்து முக்தாஸ்படிகமல்லிகா: || ௫௩ ||
இத்யாதிகாஸமஸத்ருஶா ஶ்வேதா ஸப்தவிதா ஸ்ம்ருதா |
ஜவாகிம்ஶுகபுஷ்பாபா ஐந்த்ரகோபஸமப்ரபா || ௫௪ ||
ஜாதிலிங்கநிபாகாரா ஶஶரக்தஸமப்ரபா |
தாடிமீபுஷ்பஸங்காஶா பந்தூககுஸுமப்ரபா || ௫௫ ||
ரக்தா ஸப்தவிதா ப்ரோக்தா ததைவ ஶிலோத்தமே |
*[ஸுவர்ணஸத்ருஶாகாரா சம்பகப்ரஸவோபமா || ௫௬ ||
குரண்டஸமப்ரபா வாபி ஹரித்ராஸத்ருஶா ததா |
கோ(கா)ரண்வபுஷ்பஸங்காஶா ஜம்பீரபலஸந்நிபா ||
ஹரிதாலஸமாபாஸா] ஶிலா பீதா ச ஸப்ததா |
ரிஷ்டகஷ்டாஞ்ஜநாபாஸா நீலோத்பலஸமப்ரபா || ௫௭ ||

சிலையானது, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு. என்று நான்கு வகையாகும். வெளுப்புநிறச் சிலையானது, பசுவின் பால் 1, சங்கு 2, முல்லைப்பூ 3, சந்திரன் 4, முத்து 5, ஸ்படிகம் 6, மல்லிகைப்பூ 7, இவைகளைப் போன்ற 7 வித நிறமுடையதாகும்.

சிவப்புச் சிலையானது சம்பரத்தம்பூ 1, புரசப்பூ 2, பட்டுப்பூச்சி 3, ஜாதிலிங்கம் 4, முயல் ரத்தம் 5, மாதுளம்பூ 6, பந்தூக புஷ்பம் (சிவப்புப் பூவுடன் கூடிய பெருமருந்துப்பூ) 7, இவைகளைப்போல 7 விதமாகும்.

இவ்விதமே மஞ்சள் வர்ணச்சிலையானது, ஸுவர்ணம் 1, சரக்கொன்னைப்பூ 2, சம்பகப்பூ 3, மஞ்சள் 4, மஞ்சள்நிறக் குறிஞ்சிப்பூ 5, எலுமிச்சம்பழம் 6, அரிதாரம் 7 இவைகளைப்போல 7 விதமாகும்.

---

* ஶ்லோகத்வயம் சாத்யம் பஹுகோஶேஷு ஸங்க்ருஹீதம் ஸ்தானார்ஹதயா யோஜிதம் ஜ்ஞேயம் |

முதலில் கூறியுள்ள 5ம் பல பிரதிகளிலிருந்து எடுக்கப் பட்டது. கடைசியிலிருக்கும் 2ம் இடத்திற்குப் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டது.

ஸூம்மஹாய ப்ரகண்டோஹா லக்ஷிவக்ருஷ்ண தயா |
ராஜாவர்த்த நிபாகாரா க்ருஷ்ணாஹி ஸத்ருசப்ரபா || ௩௯ ||

க்ருஷ்ணாஹிஸத்ருசாகாரா க்ருஷ்ணா து (நவ)விதா பரிக்ஷா |
ஶ்வேதரக்தபீதக்ருஷ்ணா: விப்ராதீநாம் க்ரமாச்சுபா: || ௪௰ ||

தர்மார்த்தகாமமோக்ஷாம்ஸ்து ததந்த்யேதா: ஸதைவ ஹி |
ஸ்வஜாதீயம் ஶ்ரேஷ்டம் ஸ்வஜாதீயம் விநா || ௪௧ ||

வ்ருத்தி அனுலோமாத் ப்ரதிலோமாத் ஸர்வதா ஸ்வஜாதிதா |
ஆசார்ய: ஶில்பிநௌ சைவ ஶ்வேதவஸ்த்ரோபவீதிநௌ || ௪௨ ||

கறுப்புச் சிலையானது, மஹிஷாக்ஷம் (பூனைக்கண் குங்குலியம்) 1, அஞ்சனக்கல் 2, நீலோத்பலம் 3, கருங் குளவி 4, மயிலின் கழுத்து 5, மஹேந்த்ரம் 6, ராஜா வர்த்தம் (சிறிது கருமையான தேன் நிறமான ஒருவிதக் கல்)7, கருப்புப் பாம்பு 8, குறும்பாம்பு 9. இவைகளைப் போல 10 (9) விதமாகும்.

வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு, இந்நிறங்கள் முறையே பிராமணாதி ஜாதிகளுக்கு உரியவைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன அவைகள் (ஒவ்வொன்றும்) தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளை எப் பொழுதும் கொடுப்பவைகளாம்.

அந்தந்த ஜாதிகளுக்குரிய சிலைகள், அந்தந்த ஜாதிக்கு ஶ்ரேஷ்டமாகும் ஹீனஜாதிச் சிலைகள் நிஷித்தமன்று. ஆனல் ஹீனஜாதியினருக்கு உத்தம ஜாதிச் சிலைகள் கூடாதவைகளாகும்.

இந்தப் பாகுபாட்டை, அநுலோமமாகவும் பிரதி லோமமாகவும் கொள்ளவேண்டும். ஆயினும் ஹீனஜாதிச் சிலையை ஶ்ரேஷ்டமாகக் கொள்ளக்கூடாது. (அநுலோமம் - கிரமமுறை. பிரதிலோமம் - எதிர்முறை)

ஆசார்யன் சில்பி இவ்விருவரும், வெளுப்பு ஆடை

ஶ்வேதகந்தாநுலிப்தாங்கஃ பஞ்சாங்கபூஷணாந்விதஃ |
குடாராதீநி ஸங்க்ருஹ்ய ஶிலாம் கத்வா ஸமாஹிதஃ ||

யஸ்மிந்தேஶே ஶிலா தேஶே தாம் க்ருத்வா து ப்ரதக்ஷிணம் |
தோஷவர்ஜ்யாம் ஶிலாம் த்ருஷ்ட்வா ஸந்நிஶ்சித்ய விஶேஷதஃ ||

வர்ஷாதபாக்நிதக்தாம் (தூஷ்யாம்) ச ஸங்கீர்ணாம் க்ஷாரவாரிணா |
துஷ்டதேஶஸ்திதாம் தடஸ்தாம் ச கார்யாந்தரே து யோஜிதாம் ||

பங்கசூர்ணாட்யாம் ஸிகதாம் ச ஜர்ஜராம் ரூக்ஷஸம்யுதாம் |
ரேகாபிந்துகலங்காதிஸம்யுக்தாம் பரிவர்ஜயேத் || ௪௫ ||

ஸச்சித்ரா ததாகாரா ரவிரஶ்மிஸமாயுதா |

அணிந்து, வெண்சந்தணம் பூசி, வெளுப்பு மாலையணிந்து, பஞ்சாங்க பூஷணங்கள் பூண்டு, கோடரி முதலியவைகளுடன், சிலை இருக்குமிடம் சென்று, மன அமைதியுடன் அந்தச் சிலையைப் பிரதக்ஷிணம் செய்து, தோஷமில்லாத சிலையைப் பார்த்து, விசேஷித்து அச்சிலையின் ஆகாரத்தை நிச்சயித்துக் கொள்ளவேண்டும். (44)

எப்பொழுதும் மழையில் நனைந்துகொண்டிருப்பது, வெய்யிலில் காய்ந்துகொண்டிருப்பது, தீயின் நாற்றமுள்ளது, (அல்லது தீயால் பொசுங்கியது) உப்பு ஜலம் படிந்தது, கெட்ட இடத்திலிருப்பது, தடத்தில் (ஜலக் கரையில்) இருப்பது, வேறு காரியத்திற்கு உபயோகிக்கப் பட்டது, மணல் கலந்திருப்பது, சேறு படிந்திருப்பது, சிதைவுற்றது (அழுத்தம் விசிறிப்போனது), பார்க்க பயங்கரமானது, கோடுகள் புள்ளிகள் களங்கங்கள் இவைகளுடன் கூடியது, இத்தகைய சிலைகளை நீக்கிவிட வேண்டும். (46)

வம்ஶவாதவஶாகாரா ரேகா சைவ த்ரிதா ஸ்ம்ருதா ॥ ௪௭ ॥

ஜம்பூபலஸமாகாரா த்ராக்ஷாபலஸமப்ரபா ।
அந்யா(த்யா) வ்ருத்தஸமாகாரா த்ரிவிதா பிந்துஸம்ஜ்ஞிதா ॥

க்ருஷ்ணாயஸஸமாகாரா க்ருஷ்ணப்ரமரஸந்நிபா ।
ஶிகிபிஞ்சஸமாகாரா லக்ஷணா அதமா க்ரியா
(க்ரியா ஸ்ம்ருதா) ॥ ௪௮ ॥

வம்ஶபத்ரஸமாகாரா தூர்வாங்குரஸமா ததா ।
வேணுவம்ஶாங்குராகாரா வ்ருஶ்சிகபாதவத்ததா ॥ ௪௯ ॥

அந்யாஸ்வர்ணவிதா ரேகா ஸர்வஸம்பத்ப்ரதா ।

கயிறு விழுந்தது (கல்லின் நடுவில் கயிறு போன்ற ரேகை யுள்ளது) அல்லது கயிறு போன்ற தோற்ற முடையது, ஸூரிய கிரணம் பாய்ந்தது, மறைக்கால் போன்ற உருவமுடையது என ரேகை மூன்று விதமாகும்.

நாவப்பழம் போன்ற உருவமுடையது, திராக்ஷைப் பழம் (அல்லது காய்) போன்ற உருவமுடையது, வேறு எந்த விதத்திலாவது வட்டவடிவமாக இருப்பது, என பிந்துவானது மூன்றுவிதமாகும்.

இரும்புபோன்ற நிறமுடையது, கருங்குளவிபோன்ற நிறமுடையது, மயில் தோகை போன்ற நிறமுடையது, என களங்கம் மூன்றுவிதமாகும். (இத்தகைய தோஷ முள்ள கற்கள் கூடாதவைகளாம் (49)

பேர்ச்சையிலைபோன்ற கோடுடையது, அருகங்கட்டை போன்ற கோடுடையது, மூங்கில் முளைபோன்ற கோடுடை யது, எட்டுக்கால் பூச்சியின் கால்களைப்போல நீண்ட கோடுகளுடையது, இவைகளும், வெள்ளை நிறமல்லாத மற்ற நிறமுள்ள கல்லில் வெள்ளை ரேகையும், ஸகலவித ஸம்பத்துக்களின் நிறைவைக் கொடுக்கும். [எனவே

க்ருஷ்ணக்ருஷ்ணே விநாஶாய ஶ்வேதக்ருஷ்ணே ததைவ ஹி || ௫௧ ||

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ஸம்ம்ருஶ்யாஶ்மாந் த்யஜேத்ததா꞉ |
க்ருஷ்ணா ச ஹரிதா க்ராஹ்யா ஸிதவர்ணா விஶேஷத꞉ ||

கர்ஜூரபத்ரஸத்ருஶா தூர்வாகாண்டஸமாக்ருதி꞉ ஶுபா |
அதிக்ருஷ்ணாஶுபா ப்ரோக்தா பஶுதாந்யதநாபஹா ||

ஸகலங்கா ரோகதா ஸ்யாத் ராஜராஷ்ட்ரவிநாஶநம் (நா) |
ஸபிந்துகா புத்ரநாஶதாரித்ர்யஶ்ரீவிநாஶதா || ௫௪ ||

முதலில் கூறப்பட்ட 4 வித கோடுகளும் வெள்ளைக் கல்லுக்குக் கூறப்பட்டவைகளாம்.]

கருப்புக் கல்லில் கருப்புக்கோடும், வெள்ளைக் கல்லில் கருப்புக்கோடும் அழிவை யுண்டுபண்ணும். ஆகையால், முழுமுயற்சியுடன் கீழே கூறப்பட்ட குற்றங்களில்லாத கற்களையே கிரகிக்கவேண்டும்.

கருப்பு நிறமான கல்லும், பச்சை நிறமான கல்லும், (அல்லது கருப்பும் பச்சையும் கலந்த நிறமான கல்) கிரஹிக்கத் தக்கதாகும். வெள்ளை நிறமான கல், விசேஷித்து கிரஹிக்கத் தக்கதாகும். பேரீச்சையிலையின் நிறமுடைய கல்லும், அருகங்கட்டையின் நிறமுடைய கல்லும் சுப பலனைக் கொடுக்கும்.

மிகவும் கருப்பான நிறமுடைய கல்லானது, அசுப பலனைக் கொடுக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. பசுக்கள், தானியம், தநம் இவைகளையும் அழித்துவிடும். (53)

களங்கதோஷமுள்ள கல்லானது, ரோகத்தை யுண்டு பண்ணும்; அரசன், ராஜ்யம் இவைகளையும் அழித்துவிடும்.

பிந்து (புள்ளி) தோஷமுள்ள கல்லானது, புத்திர நாசத்தையும் தாரித்திரியத்தையும் கொடுக்கும்; இருக்கும் செல்வத்தையும் அழித்துவிடும்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

இவ்விதமாகக் கற்களின் குணதோஷங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, தோஷமுள்ள சிலைகளை நீக்கி, குணமும் லக்ஷணமுமுடைய சிலையையே கிரஹித்துக்கொள்ள வேண்டும்.

சிலையானது, ஒலி, உருவம் இவைகளின் பேதங்களால் பாலை, யுவதி, விருத்தை என்றும், புருஷ சிலை, ஸ்திரீ சிலை, நபும்ஸக சிலை என்றும், பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் முறையைக் கூறுகிறேன். கேட்பாயாக!

கெல்லும்பொழுது, சத்தமும் குட்டையான உருவமும் உடைய சிலையானது, பால சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

மணியின் ஓசையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது ஸ்திரீ சிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

எரசலான சத்தமுடையது விருத்தசிலை என்று கூறப்பட்டிருக்கிறது. (57)

மணியோசையைப்போல் அதிக சத்தமும் நீண்ட வடிவமுமுடையது, புருஷ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

பண்ணையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது, ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

அஸ்நிக்தா கர்கஶா ரூக்ஷா ஶப்தஹீநா நபும்ஸகா |
ஶப்தேநைவம் ஸமாக்யாதா ஆக்ருத்யா பேத உச்யதே ||

சதுரஶ்ரா ச வஸ்வஶ்ரா ஸ்த்ரீஶிலேதி ப்ரகீர்த்திதா |
ஆயதாஶ்ரா ச வ்ருத்தா ச தஶத்வாதஶகோணகா || ௬0 ||

பும்ஶிலா ஸா ஸமாக்யாதா ஸுவ்ருத்தா ஸா நபும்ஸகா |
தஶாஶ்ராம் த்வாதஶாஶ்ராம் ச பாலாம் வ்ருத்தாம் ச வர்ஜயேத் ||

லிங்கம் குர்யாத் பும்ஶிலாபிஃ ஸ்த்ரீஶிலாபிஶ்ச பிண்டிகாம் |
நபும்ஸகஶிலாபிஸ்து பாதாதாரம் ஸமாசரேத் || ௬௨ ||

பளபளப்பில்லாமல் உறுதியில்லாமல் கரடுமுரடாய் ஒலியில்லாமலிருக்கும் சிலையானது நபும்ஸக சிலை என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விதம் ஒலியினால் பேதம் கூறப்பட்டுள்ளது. இனி உருவத்தினால் பேதத்தைக் கூறுகிறேன். (59)

சச்சதுரமாகவும் எட்டுக் கோணமாகவும் இருக்கும் சிலையானது ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

நீண்டசதுரமாகவும், வட்டவடிவமாகவும், பத்துக் கோணமாகவும், பன்னிரண்டு கோணமாகவும் இருப்பது, புருஷசிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

நன்கு வட்டவடிவமாக இருப்பது, நபும்ஸக சிலையாகும்.

10 கோணமாக இருக்கும் சிலை, 12 கோணமாக இருக்கும் சிலை, பாலசிலை, விருத்தசிலை, இவைகளை விலக்கிவிட வேண்டும். (61)

புருஷ சிலையினால் லிங்கத்தைச் செய்யவேண்டும். ஸ்திரீ சிலையினாலே பிண்டிகையைச் செய்யவேண்டும்

[illegible] ।
[illegible]
[illegible] ॥ [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible]
[illegible] ॥ [illegible] ॥

[illegible] ।

(பிண்டிகை–பீடம்.) நபும்ஸக சிலையினாலே பாதா தாரத்தைச் செய்யவேண்டும். (பாதாதாரம்–லிங்கத்தின் அடித்தலத்தின் ஆதாரம்.) இப்படிக்குச் செய்யாமல் இதற்கு விபரீதமாகச் செய்தால், அது எப்பொழுதும் கர்த்தாவுக்கு (செய்தவனுக்கு) அழிவையுண்டுபண்ணும்.

தேசிகனானவன், கிழக்கு நுனியாகவோ வடக்கு நுனியாகவோ இருக்கும் சிலையை கிரஹிக்கவேண்டும். (63)

கிழக்கு நுனியான சிலையில், மேற்குப்பக்கம் அடிப் பக்கமாகும். வடக்கு நுனியான சிலையில் தென்பக்கம் அடிப்பக்கமாகும். கிழக்குப்பக்கமும் வடக்குப்பக்கமும் லிங்கத்தின் நுனிப்பக்க (தலைப்பக்க)மாகும் என்று கூறப் பட்டிருக்கிறது. சிலையின் அடிப்பக்கம் முகமாகும் (முன் பக்கமாகும்). மேல்ப்பக்கம் பின்பக்கமாகும்.

இவ்விதமாக, சிலையை நன்கு பரீக்ஷித்துப்பார்த்து, அதை எடுத்து, அந்தச் சிலையை, ஹிருதய மந்திரத்தினாலே பசுப்பாலினால் நன்கு அலம்பி சுத்தம் செய்யவேண்டும். பிறகு, அந்தச் சிலையைத் தூக்கி நிறுத்திவைத்து, ஸத்திய மந்திரத்தினாலே சந்தனம் புஷ்பம் முதலியவைகளால்

தஸ்யாஸ்து ஶாங்கரே தேஶே ஶாந்திஹோமம் து
காரயேத் ॥ ௬௬ ॥

அக்ந்யாதாநாதிகம் ஸர்வம் ஸம்யக் கார்யம் யதோதிதம் ।
ஸமிதோ ஹ்ருதயேநைவ மூலேநாஜ்யம் து ஹோமயேத் ॥

அகோரேண சருஹோமம் ச புருஷேணைவ தண்டுலம் ।
திலாநீஶாநமந்த்ரேண ஸர்ஷபம் கவசேந து ॥ ௬௮ ॥

ஶதம் தததர்தம் பாதம் வா ப்ரத்யேகம் ஜுஹுயாத் க்ரமாத் ।
ஸ்விஷ்டக்ருதம் அக்நேதி மந்த்ரேணாஹுதிமாசரேத் ॥

ததோ வஹ்நிம் விஸர்ஜ்யாஸ்ய பூஜாவஶேஷிதம் த்யஜேத் ।
ஶிலாச்சேதகரம் ஶஸ்த்ரம் அஸ்த்ரேண பூஜயேத் ॥ ௭௦ ॥

பூஜிக்கவேண்டும். அதன் பிறகு, அதன் ஈசாந்ய திக்கில் சாந்தி ஹோமத்தைச் செய்யவேண்டும். (66)

அக்நி ஆதாநம் முதலிய எல்லாவற்றையும், அதற்குக் கூறியுள்ள முறைப்படி செய்யவேண்டும். ஹிருதய மந்திரத்தினால் ஸமித்துக்களையும், மூலமந்திரத்தினால் நெய்யையும், அகோர மந்திரத்தினால் சரு (அந்நம்) வையும், புருஷ மந்திரத்தினால் தண்டுலத்தையும், (தண்டுலம் – அரிசி) ஈசான மந்திரத்தினால் எள்ளையும், கவச மந்திரத்தினால் கடுகையும் ஹோமம் செய்யவேண்டும். கீழே கூறியுள்ள ஸமித்து, நெய், அந்நம், அரிசி, எள்ளு, கடுகு, இவைகள் ஒவ்வொன்றையும் முறையே 100, 50 அல்லது 25 தடவை ஹோமம் செய்யவேண்டும். அக்நே என்ற மந்திரத்தினால் ஸ்விஷ்டகிருத் ஹோமத்தைச் செய்து, அதன் பிறகு, பூர்ணாஹுதி ஹோமத்தைச் செய்யவேண்டும். (69)

அதன் பிறகு, அக்நியை உத்வாஸநம் செய்துவிட்டு, பூஜைசெய்த நிர்மாலிய புஷ்பம் முதலியவைகளை எடுத்துக் களையவேண்டும்.

சிலையைத் துண்டாடவேண்டிய ஆயுதத்தை, அஸ்த்ர

* [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥ ௭௨ ॥
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௭௩ ॥

[illegible] ।

மந்திரத்தினாலே பூஜை செய்யவேண்டும். அபஸர்பண மந்திரத்தை ஜபித்து, சிலையைத் தூண்டாடவேண்டும். அதற்குப் பிறகு சிற்பி செய்யவேண்டிய காரியத்தை ஸ்தபதி முதலியவர்கள் செய்யவேண்டும். (71)

கடிதண்டத்தின் மேல்பக்கம் எல்லையை (உச்சியை) வம்சதண்டத்துடன் இணைக்கவேண்டும். அல்லது (வம்ச தண்டமானது) வகேக்ஷா தண்டத்திற்குக் கீழே 2 அங்குலத்தில், கடிதண்டத்துடன் இணைந்துமிருக்கலாம். வக்த்திராம்சத்தை (முகபாகத்தை) கூறியுள்ள விதிப்படியே கல்பிக்கவேண்டும். பக்ஷ (வகேக்ஷா) தண்டத்தின் முகமானது (நுனியானது) 1 முதல் 8 வரையில் எவ்வளவு கைகளிருக்கின்றனவோ, அவ்வளவு முகப்புகளுடனிருக்க வேண்டும். (11)

பக்ஷ தண்டத்தின் விசாலத்தை ஹஸ்தங்களின் எண்

---

*யயாவக்ஷ்ஶிவாஂ கா-யா-ிதூ ெநந விதி நா வா-ய: | உதி
ஸமஸூ ிஉஹொழுயூொஶாதூகா வா: |
யயாவக்ஷாஂஶிவாஂ கா-ய-ாக், உதி வாெந ஷாவ்யூதி ஹாி

ஶிரா(வா)வ்யாஸம் ததேவாக்ர(கார)பம் கார்யமிஷ்டம் து
(ஊர்த்வாக்ரம்) க்ரமாச் ச க்ருஶம் ॥ ௧௨ ॥

*கடிதண்டாஶ்ரயம் ஏகம் ஶிகாயாமம் த்ர்யங்குலம் |
ஸார்த்தாங்குலம் து தத்தாரம் வ்ருத்தம் தத்ஸமதுங்ககம் ||

ஸ்தானகம் ஸகலம் சேத் து ஊருதீர்க்கோபரி க்ஷிப |
அஷ்டாங்குலம் ஸமாரோப்ய ஊருமூலாயதம் பவேத் ||

ஆஸனே ஸகலே ஜானுதீர்க்கோர்த்வம் ந ரோபயேத் |
ஊருமூல(லே) ஸுஷிம் க்ருத்வா கடிதண்டாக்ரமர்பயேத் ||

ஶிகாயாம் து ஸமாரோப்ய யாவத்(நா)ஸ்ரம் யதா |

களாலே வகுக்கவேண்டும். அவைகளில் 1 பாகமானது அதன் சிகையின் (சையின் உச்சியின்) அகலமாகும். இது மேலேபோன்று வரிசையாக (அடிமுதல் நுனிவரையில்) முறையே சிறுத்திருக்கவேண்டும். (12)

*கடிதண்டத்தைச் சார்ந்திருக்கும் ஒரே சிகையின் உயரமானது 3 அங்குலமாகும். அதன் அகலமானது $1\frac{1}{2}$ அங்குலமாகும். அது வட்டமாகவும் அதற்கு ஸமமான கனமுடையதாகவும் இருக்கவேண்டும். (13)

ஸகல மூர்த்தியானது ஸ்தானக மூர்த்தியாக இருந்தால் துடையின் நீளத்திற்குமேலே, 8 அங்குலம் சேர்த்து, ஊருமூலத்தின் உயரமிருக்கவேண்டும்.

ஆஸந மூர்த்தியாக இருந்தால் துடையின் உயரத்திற்கு மேலே சேர்க்கக்கூடாது.

ஊருமூலத்தில் துவாரம் செய்து, கடிதண்டத்தின்

---

* கடிதண்டாஶ்ரயோர்த்வாக்ரம் , இதி ஸரஸ்வதீ மஹால் புஸ்தக பாட: |

* கடிதண்டத்தைச் சார்ந்து ஊர்துவாக்கிரமாக (மேனோக்காக) இருக்கும் நுனியின் உயரம் 3 அங்குலமாகும் என்பது, ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்

ஜாநுமாத்ரம்(ந்தம்) ஶிகா க்ருத்வா மத்⁴யம் ஸம்யோஜயேத் க⁴நம் ||

ஜாநுமாநம் த்³விபா⁴க³ம் து ஊருமாநார்த⁴ஸம்யுத꞉ |
ஜங்கா⁴மாநம் த்³விபா⁴க³ம் து ஸம்யோஜ்யம் த்ர்யங்கு³லம் ஶிகா²
(ஶிகா²) || ௧௬ ||

*ஜாநுமத்⁴யே(மூர்த்⁴நி) பி³ந்து³꞉ ஸ்யாத் ஊர்த்⁴வாக்³ரம் து
ஶிகா²ந்விதம் |
ஸம்யோஜ்யாதி⁴கமாநம் ... ... உதா³ஹ்ருதம் ||௧௭||

ஜங்கா⁴(மூ)மூலே விஸ்தாரே த்ரிபா⁴கே³ ஜாநுமூர்த்⁴நி விஸ்தாரம்
பா⁴க³꞉ |

அக்கிரங்களில் (இருகோடிகளிலும்) அதன் சிகையில் பிணைக்கவேண்டும். அதன் மத்தியமானது கனமாக இருக்கவேண்டும். (15½)

முழங்காலின் அளவை 2 பாகங்களாகச் செய்து, தொடையினளவுடன் பாதியும், கண்டைக்காலளவுடன் பாதியுமாகக் கணக்கிட்டு, அத்துடன் 3 அங்குலத்தைச் சிகாமானமாகக் கூட்டிக்கொள்ளவேண்டும். (சிகை-உச்சி) இந்த 3 அங்குலமானது முட்டுக்காலின் அளவைக்காட்டிலும் அதிகமாகக் கூறப்பட்ட அளவாகும். முட்டுக்காலின் மத்தியில் பிந்து (துவாரம்) இருக்கவேண்டும். அதன் ஊர்த்துவாக்ரமானது (மேல்ப்பக்கம் நுனியானது) சிகையுடன் (அதிகமாகக் கூறப்பட்ட 3 அங்குலம் சிகையுடன் இருக்கவேண்டும். அதன் உச்சியில் 3 அங்குலம் அதிகமாகச் சேர்க்கவேண்டும் என்பது பொருள்.)

கண்டைக்காலின் அடியின் அகலத்தில் 3ல் 1 பங்கு, முட்டுக்காலின் சிகையின் அகலமாகும். அழகான (அல்லது நன்கு இழைக்கப்பட்ட) கண்டைக்கால் நுனியின்

* அத்ர கோஶாக்ஷரேஷு ஸம்யக் தீ³ர்க⁴ஹ்ரஸ்வாதி³தோ³ஷா꞉ ந த்³ருஶ்யந்தே | அபி து ஸம்யோஜ்யம் த்ர்யங்கு³லம் அதி⁴கம் பரிகல்ப்ய உதா³ஹ்ருதம் || இதி உத்தராம்ஶோ(அ)ர்த²꞉ |

[illegible] ||௧௯||

[illegible] ।
[illegible] ||

[illegible] ।
[illegible] ||

[illegible] ।
*[illegible] || ௨௨ ||

[illegible] ।

உச்சியை, (மேல்த்தலப்பை) மேல் முனையில் (தொடையின் நுனியில்) இசைக்கவேண்டும். ஜாநுஸந்திக்கு (முழங்கால் பூட்டுக்கு) மேலே அதிகமாக உயர்ந்திருப்பது, சிகையின் அளவான 3 அங்குலமாகும். (19)

ஸந்தியற்ற (பூட்டில்லாத) சதுரமான சூலமானது ஒன்றுதான் விதிக்கப்பட்டுள்ளது. கண்டைக்கால் நீளத்துடன், தலமானத்தை (பாததல அளவை)க் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். (20)

ஊருதண்டத்தின் அகலமானது, நடுத்துடையின் அகலத்தில் 3ல் 1 பங்கு அகலமுடையதாகும். அதன் நுனியானது, (அந்த அகலத்தில்) $\frac{3}{4}$ பங்கு அகலமுடையதாகும். ஜங்காமூலமும் (கண்டைக்காலின் அடியும்) அதே ($\frac{3}{4}$ பங்கு) அகலமுடையதாகும். கண்டைக்கால் நுனியின் அகலமானது, அதன் அடியின் அகலத்தில் 3ல் 1 பங்கு குறைந்திருப்பதாகும்.

பாதநுனியின் அகலமானது, பாததலத்தின் நீளத்தில் 3ல் 2 பங்காகும். பாதமத்தியம் பாதமூலம் இவைகளின் அகலமானது, முறையே பாதாக்கிர விஸ்தாரத்தில்

---

*[illegible] ||
[illegible] ।

सातकवाङ्घ्रितलव्यासं मध्य(मध्यमाय)ते परे ॥

कुर्याद्वा सार्धरिपं तत्र जङ्घाग्राधिकाय(य)तः ।
पादमूले पृथु त्र्यंशं कुर्याद्वा(कुर्यात्तु)बाहुमूल
सुदृढं स्याते ॥ २४ ॥

बाहोर्मूलविशालं तु गुणाङ्गुलमुदाहृतम् ।
तदग्रं द्व्यङ्गुलव्यासं प्रकोष्ठमूलं च तत्समम् ॥

सार्धद्व्यङ्गुलं वा स्यात् प्रकोष्ठ(प्रकोष्ठ)मूल
विशालकम् ।

$\frac{3}{4}$ பங்கும், $\frac{1}{2}$ பங்கும் இருப்பதாகும். இங்கு கூறப்பட்டிருக்கும் அகலமானது, முறையே, பாதத்தின் அக்கிரபாகம் மத்தியபாகம் மூலம் இவைகளின் அகலமாகும். பாதமூலத்தில் அகலமான இடத்தில் நடுவில் துவாரம் செய்ய வேண்டும் அந்த துவாரமானது, ஜங்காக்கிர துவாரத்தைக் காட்டிலும் (முழங்கால் பூட்டின் துவாரத்தைக்காட்டிலும்) பெரியதாக இருக்கவேண்டும். (அந்த பாதமூல துவாரத்தில் பாத சூலத்தை) மனோஹரமாகவும் உறுதியாகவும் இருக்கும்படி பொருந்தவைக்கவேண்டும். இனி பாஹு சூலத்தைக் கூறுகிறேன். (24)

பாஹுமூலத்தின் விசாலமானது (மேல்க்கையடியின் அகலமானது) 3 அங்குலம் கூறப்பட்டிருக்கிறது அதன் நுனியானது 2 அங்குலம் அகலமுடையதாகும். பிரகோஷ்ட மூலத்தின் (கீழ்க்கை அடியின்) அகலமும் அதேபோன்று (2 அங்குலம்) அகலமுடையதாகும். அல்லது, பிரகோஷ்ட

सातकवाङ्घ्रितलव्यासे मध्यायता परेष्वपि ॥

कुर्यात् सार्धरिपं तत्र जङ्घाग्रे(जङ्घाग्रे)
विकायतः ।

पादमूले पृथु त्र्यंशं कुर्याद्वा यष्टिमुद्दृढं स्याते ॥

इति पादतलक्षणवारः ।

தந்மூலவிஸ்தாரம் த்வயம் ஸார்த்தம் ப்ரகோஷ்டாக்ரம் விஸ்தாரார்த்தகம் ||

பாஹுப்ரகோஷ்டயோர்மத்யே (ஸந்தௌ) கூர்பரம்
ஜாநுவத்பவேத் |

த்வ்யங்குலம் தச்சிகாமாநம் யோஜயேத் த்ருடம் யதா || ௨௭ ||

*பார்ஸ்வயோர்வர்த்தநம் சைவ வம்ஸ(வம்)ஸதண்டேந தத்
யோஜயேத் |

மூலத்தின் அகலமானது 2½ அங்குலமாகவுமிருப்பதாகும் பிரகோஷ்டத்தின் (முன்கையின்) நுனியின் அகலமானது அதனடியின் அகலத்தில் ஸரிபாதியகலமுடையதாகும். பாஹு, பிரகோஷ்டம் இவைகளின் இடையிலுள்ள, கூர்ப்பரமானது (முழங்கையின் ஸந்தியானது) முழங்கால் ஸந்தியைப்போல இருப்பதாகும். முழங்கை ஸந்தியின் சிகையின் அளவானது 2 அங்குலமாகும். அதை உறுதியாக இருக்கும்படி இசைக்கவேண்டும். (27)

*பார்சுவ வர்த்தநத்தை (இரண்டு பக்கங்களிலுமுள்ள பக்க சூலங்களை) வம்சதண்டத்துடன் (முதுகின் மத்தியிலமைக்கப்படும் வம்சதண்டத்துடன்) இணைக்க

---

*யோஜயேத் ஸார்த்ரகம் த்ரிமாத்ரம் நிம்நம் த்ருட(ஸு)ஸம
ஆயிதம் |

இதி ஸரஸ்வதீமஹாலயஸ்தக்ரந்தாதிகபாட: |

௨௮, ௨௯, ஶ்லோகா: ஸர்வத்ர க்ரந்தேஷு

ஸூத்ரம் ஸ்கந்தாத் து நிஷ்க்ராம்ய வாமபார்ஸ்வயோரபி |

ஹஸ்தவாதம் ப்ரோக்தம் தாத்ரவர்த்தேந யோஜயேத் ||

ப்ருஷ்டே ச பக்ஷபிம்பே ச பாதமூலே ததா பவேத் |

இதி ஸரஸ்வதீமஹாலயபுஸ்தகபாட: |

* பாததுவாரத்திற்குள் 3 அங்குலம் பதிந்து அழுத்தமாக இருக்கும்படி இணைக்கவேண்டும. என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள அதிக பாடம்.

𑌅𑌧𑌿𑌪𑌕𑍍𑌷𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ||

𑌵𑌂𑌶𑌦𑌣𑍍𑌡𑌸𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌕𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌿(𑌸𑌮𑌾𑌯)𑌤𑌮𑍍 |
𑌅𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌪𑌕𑍍𑌷𑌦𑌣𑍍𑌡𑍇 𑌤𑍁 𑌮𑍂𑌲𑌦𑌣𑍍𑌡𑍇 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ||

𑌸𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 𑌮𑍂𑌲𑍇 𑌤𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌦𑌣𑍍𑌡𑍌(𑌡) 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 |
𑌹𑌸𑍍𑌤𑌪𑌾𑌦𑌤𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌤𑌾𑌮𑍍𑌰𑌪𑌟𑍍𑌟𑍇𑌣 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ||

𑌋𑌜𑍁𑌬𑌿𑌮𑍍𑌬𑍇 𑌋𑌜𑍁𑌶𑍂𑌲𑌂 𑌬𑌿𑌮𑍍𑌬𑍇 𑌵𑌾 𑌶𑍂𑌲𑌵𑌕𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾 |
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌶𑍂𑌲𑌮𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌮𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ||

𑌮𑌧𑍍𑌯𑍋𑌦𑌰𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑍈𑌕𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌵𑌂𑌶(𑌤𑌸𑍍𑌯) 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌤𑍍 |

வேண்டும். அதன் நீளமானது, பக்ஷமத்திய தீர்க்கத்திற்கு (பக்கங்களின் நீளத்திற்கு) அதிகமாக இருக்கவேண்டும். அதன் (பக்ஷதண்டத்தின்) அகலம் 3 அங்குலமாகும். (28)

அது, வம்சதண்டத்திற்கு ஸமமாக வணங்கி (வளைந்து) ஊர்துவகாய..............(த்திற்கு ஸமமாக நீண்டு) இருக்கவேண்டும். அதை பக்ஷதண்டத்தின் நுனியிலும் மூலதண்டத்திலும் இணைக்கவேண்டும். பார்சுவ தண்டங்கள் இரண்டும், அடியிலும் (நுனியிலும் உரிய இடத்தில் இசைந்திருக்கவேண்டும்).

ஹஸ்தம் பாததலம் இவைகளின் அக்கிரத்தை நுனியை தாமிரத் தகடுகளினுலே இசைக்கவேண்டும். (ஹஸ்தபாதங்களின் ஸந்திகளை தாமிரத்தகட்டினுலே இறுக்கிச்சேர்த்து பலப்படுத்தவேண்டும் என்பது பொருள்)

பிம்பமானது நேராக இருந்தால், சூலமும் நேராக இருக்கவேண்டும். பிம்பமானது சாய்வாக இருந்தால், சூலமும் சாய்வாகவே இருக்கவேண்டும். இவ்விதமாக தேவர்களின் சூலம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஸ்திரீ தேவதைகளின் சூலத்தைக் கூறுகிறேன். (31)

மத்தியோதரத்தின் விஸ்தாரத்தில் 3ல் 1 பங்கு

𑌅𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌹𑍀𑌨𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌸𑍍𑌤𑌕𑌂
(𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑌕𑌂) || ௯௨ ||

𑌬𑌾𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 *𑌵𑌾𑌤𑌨𑍍𑌯(𑌸𑍍𑌯𑌾)𑌯𑌾𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 ।
𑌪𑌕𑍍𑌷𑌦𑌣𑍍𑌡𑌾𑌯𑌤𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ||

𑌤𑌦𑌾𑌯𑌾𑌮𑌂 𑌬𑌾𑌹𑍍𑌵𑌨𑍍𑌤𑌂(𑌯𑌾𑌮𑌾𑌷𑍍𑌟𑌦𑌳𑌂)𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌕𑌟𑌿𑌦𑌣𑍍𑌡𑌮𑌿𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌟𑌿𑌤𑌾𑌰𑍇 𑌤𑍁 𑌹𑍃𑌤𑌾𑌂𑌶𑍇 𑌯𑍁𑌗𑌾𑌂𑌶𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍀𑌰𑍍𑌘𑌕𑌂 ||

𑌶𑍇𑌷𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 (𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌤𑌤𑌃) 𑌶𑍃𑌣𑍁 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌵𑌂𑌶𑌦𑌣𑍍𑌡𑌂 𑌤𑍁 𑌵𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌶𑍇𑌷𑌰𑍋𑌪𑌯𑍇𑌤𑍍 || ௯௫ ||

(உதரகூலத்தின்) விஸ்தாரமாகும். அதன் உச்சியின் அகலமானது, (அதற்குக் கூறப்பட்டிருக்கும் அகலத்தில்) 8ல் 1 பங்கு குறைவாகவும் வட்டமாகவும் இருக்கவேண்டும்.

பாஹுவின் (மேல்க்கையின்) அகலமானது, அதன் அகலத்தில் ஸரிபாதி அகலமுடையதாகும். அதன் மிகுதியானது, பக்ஷதண்டத்தின் நீளமாகும். அதன் அகலத்தில் ஸரிபாதியகலம், அதனுடைய அகலமாகும். அதில் ஸரிபாதியளவு அஷ்டதளமாகும். இனி கடிதண்டத்தைக் கூறுகிறேன்.

இடுப்பின் அகலத்தில், 5ல் 4 பங்கு, அதன் நீளமாகும். மற்றவைகளை முன்பு கூறியிருப்பதுபோலவே செய்யவேண்டும். இனி விசேஷத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக (34½)

வம்சதண்டத்தை (முதுகெலும்பின் ஸ்தாநத்திலுள்ள சூலத்தை) ஆஸநத்தில் (பீடத்திலுள்) 8 அங்குலம் சொருக வேண்டும். (அதற்குமேலே) 3 அங்குலம் பிருஷ்டபாகத்

*𑌤𑌤𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌠𑌃 𑌸𑌾𑌧𑍁𑌰𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

[illegible] (?)
[illegible] ||

[illegible] |
[illegible] || ௩௭ ||

[illegible] |
[illegible] || ௩௮ ||

[illegible] |
[illegible] || ௩௯ ||

[illegible] |
[illegible] || ௪௦ ||

[illegible] |
[illegible] || ௪௧ ||

தின் மானமாகும். அது நீங்கிய மிகுதியானது, (சூலத்தின் பின்பக்கத்தில் பொருத்தப்படும் பாகமாகும்.)...... (35½)

பிம்பமானது ஸ்தானகமாக இருந்தால், அதன் கண்டைக்காலின் நீளத்துடன் 6 அங்குலம் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதன் நடுவில் துவாரம்செய்து, மேலே பாதி கீழே பாதியாகக் கல்பிக்கவேண்டும். இவ்விதமாக சூலலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி உபசூலத்தைக் கூறுகிறேன். (37)

---

* [illegible] |

† [illegible] |

உபஶூலஶிராயாம் து வம்ஶாக்ரேபி ஸுஷிரம் காரயேத் ।
லோஹஜம் தாருஜம் வாபி கீலகம் யோஜயேத்த்ருடம் ॥ ௪௨ ॥

பிம்பார்த்தம் ஶூலமாக்யாதம் தஸ்மாதுக்தம் ஸமாசரேத் ।
ஶூலலக்ஷணமாக்யாதம் ஶூலஸ்தாபனமுச்யதே ॥ ௪௩ ॥

இதி காஶ்யபஶில்பே ஶூலலக்ஷணம் நாம
த்ர்யஶீதிதம: படல: ஸமாப்த: ॥

பித்திமத்தியிலிருந்து பக்ஷதண்டகராந்தமானது, உபசூலத்தின் உயரமாம். அதன் அகலம் 8 அங்குலம். கனம் 4 அங்குலம். இதை ஸமதலத்தில் பொருந்தவைக்க வேண்டும். அதில் அகலத்திற்கேற்ற துவாரமிருக்க வேண்டும்.

பித்திமத்தியம் அதன் மூலமாம். மூலத்தைக் கட்டி பலப்படுத்த வேண்டும். பக்ஷதண்டம், கடிதண்டம், சூல தண்டங்களைச் சேர்த்து துவாரத்தில் கட்டி, கீலபந்தநம் செய்யவேண்டும். (கீலம் – முளை)

உபசூலத்தின் உச்சியில், வம்சதண்டத்தின் அக்கிர பாகத்தில் (உச்சியில்) துவாரம் செய்யவேண்டும். (அதில்) லோஹத்தினாலான அல்லது மரத்தினாலான கீலகத்தை (முளையை)ச் சொருகி உறுதி செய்யவேண்டும். இவ்விதமாக பிம்பநிர்மாணத்திற்கான சூலமானது கூறப்பட்டிருக்கிறது. ஆகையால், (இந்த சூலத்தை) சொல்லியிருக்கும்படியே செய்யவேண்டும். இவ்விதமாக சூலலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி சூலஸ்தாபநத்தைக் கூறுகிறேன்.

காசியபீய சில்பசாஸ்திரத்தில் சூலலக்ஷணமென்னும்
எண்பத்திமூன்றாவது படலம் முற்றும்.

॥ அத சதுரசீதிதம: படல: ॥

சூலஸ்தாபநவிதி: ॥

அத வக்ஷ்யே விசேஷேண சூலஸ்தாபநமுத்தமம் |
கர்ஷணோக்தே சுபே மாஸே சுபர்க்ஷே வாரலக்நகே ॥ 1 ॥

நிச்சித்ய ஸ்தாபநம் தஸ்ய பூர்வ: அங்குரார்ப்பணம் |
ப்ராஸாதஸ்யாக்ரத: பார்ச்வே மண்டபம் சதுரச்ரகம் ॥ 2 ॥

*பஞ்சஸப்தகரம் வாத நவ ஹஸ்தாயதாபி வா |
பாதஹஸ்தஸமாயுக்தம் ஷோடசஹஸ்தமிஷ்யதே ॥ 3 ॥

தந்மத்யே மாத்ருகாஸ்தாநே வேதிகாம் ஸம்ப்ரகல்பயேத் |
பஞ்சாங்குலஸமோத்ஸேதம் சதுரச்ரம் (சதுச்ரம்) நிம்ந (நிம்நே)
ணம் த்ரிதம் ॥ 4 ॥

எண்பத்திநான்காவது படலம்.

சூலஸ்தாபநவிதி.

இனி உத்தமமான சூலஸ்தாபந விதியைக் கூறுகிறேன். உழவுக்குக் கூறப்பட்ட நக்ஷத்ரம் (சிறந்த) மாதத்தில் சுபகரமான நக்ஷத்ரம், வாரம், லக்கினத்தில் சூலஸ்தாபனத்தை நிச்சயித்து, அதற்கு முன்பு அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும். பிராஸாதத்திற்கு (தேவாலயத்திற்கு) முன் பக்கத்தில் சதுரச்ரமான (சச்சதுரமான ஓர்) மண்டபத்தைக் கல்பித்துக்கொள்ள வேண்டும் * அதன் அகலநீளம் 5, 7, அல்லது 9 முழம் இருக்கவேண்டும். 10 முழமும் இருப்

*பஞ்சஸப்தகரம் வாத பாதத்ரயஸமாயுதம் |
ஷோடசஹஸ்தஸம்யுக்தம் ஸார்த்தஹஸ்தஸம்யுதம் ॥
தந்மத்யே மாத்ருகாஸ்தாநே வேதிகாம் ஸம்ப்ரகல்பயேத் |
பஞ்சாங்குலஸமோத்ஸேதம் சதுரச்ரம் நிம்ந (நிம்நே)ணம் த்ரிதம் ॥
இதி க்ரந்தாந்தரபாட: |

* அதன் அகலநீளமானது 5, அல்லது 7 முழமும் 3 அடியும் இருக்கவேண்டும். அல்லது 5, அல்லது 7 முழமாகவும்

*ஸத்யம் ஸம்பதாகாரம் நாளிகேரபலாதிபி: |
முக்தாவலம்ப்ய விதாநேந உக்தாக்ரம் தர்ப்பஶோபிதம் || ௫ ||

த்வாரம் ப்ரவேஶநோபேதம் ஸதோரணஸமாயுதம் |

பதுமாகும். அதற்கு 16 கால்கள், அல்லது தூண்கள் இருக்கவேண்டும். அதன் அடித்தலமானது 8 அங்குலம் உயரமுடையதாக இருக்கவேண்டும். அதன் பாதத்தின் அகலமும் உயரமும் 10 அங்குலமிருக்கவேண்டும். அதன் பரீணாஹமானது (பரீணாஹம்-சுத்தளவு சுத்துப்புறமானது) கிடைத்த அளவுக்கு இருக்கவேண்டும். அது வக்கிரமாகவும் (வக்கிரம்—கோணல்) (கோணல் இல்லாமலும்) சிதைவு இல்லாமலும் உறுதியாகவுமிருக்கவேண்டும். (4)

அந்த மண்டபத்திற்கு நான்கு பக்கங்களிலும் மூங்கில் களால் வளையங்கள் கட்டவேண்டும். (போய்வருவதற்கு ஸாதநமான மார்க்கங்கள்.) அதில் தேங்காய் முதலியவை களால் அலங்காரம் செய்யவேண்டும். அதன் உச்சியில் முத்துக்களை தொங்கவிடவேண்டும். தர்பங்களை அலை அலையாகச் சுத்திக்கட்டவேண்டும். தோரணங்களைக்

---

3 பிரிவுகளுடையதாகவும் இருக்கவேண்டும். அதில் 16 அல்லது 12 கால்களிருக்கவேண்டும். அதன் அடித்தலம் 8 அங்குலம் உயரமுடையதாக இருக்கவேண்டும். 10 (அங்குலம்) அகலமும் உயரமுமுடையதாக இருக்கவேண்டும். கிடைத்தவரையில் சுத்தளவு உடையதாக இருக்கவேண்டும். அது வாமகமாகவும் குட்டையாகவும் (அல்லது அழகாகவும்) வடுவில்லாமலும் உறுதியாகவுமிருக்கவேண்டும் என்பது பதுப்பித்த புத்தகத் திலுள்ள பாடம்.

*ஸத்ரம் ஸம்பாதஸம்பாத்யம் நாளிகேரதளாதிபி: |

உத்ஸ்ருஷ்டாவலம்ப்ய விதாநேந உக்தாக்ரம் தர்ப்பஶோபிதம் ||

த்வாரம் ப்ரதி .... ஆரதோரணஸம்யுதம் |

[illegible] || ௬ ||

[illegible] |
*[illegible] || ௭ ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |

கட்டவேண்டும். இத்தகைய 4 வழிகளிலும் ஸ்தம்பங்களைத் துணிகளாலே போர்த்தி அலங்கரிக்கவேண்டும். இந்த 4 துவாரங்களைத் தவிர மற்ற இடங்களை ஓட்டைகளில்லாமல் மறைத்துவிடவேண்டும். அல்லது ஆங்காங்கு ஜன்னல்களை கல்பிக்கவேண்டும். மண்டபமத்தியிலுள்ள வேதிகை (திட்டாணி)யானது (நீளம்) மண்டபத்தில் 3ல் 1 பங்கு இருக்கவேண்டும் (அதன் மத்தியில்) 6 அங்குலம் அகலம் உயரமுடையதாக (திட்டாணியை) கல்பிக்கவேண்டும். அது கண்ணாடியின் மத்தியத்தைப்போல அழகாகவும் அழுத்தமாகவும் இருக்கும்படிசெய்து, அதில் உருவத்தை எழுதவேண்டும்? (8)

அந்த வேதிகையைச் சுற்றிலும் மேலே கூறப்படும் முறையுடன் அக்கினி குண்டங்களைக் கல்பிக்கவேண்டும். சதுரச்ர குண்டம் தநுர்விருத்த (வில்லைப்போல அரைவட்டமான) குண்டம், பத்மகுண்டம், இவைகளைக் கிழக்கு முதலிய திக்குகளில் கல்பிக்கவேண்டும். கிழக்கு வடகிழக்கு

---

*[illegible] ||
[illegible] |
[illegible] ... ... [illegible] ||
[illegible] |

குண்டான்யேவம் ஸமாக்யாதம் கேவலானாம் விசேஷத꞉ || ௧௧ ||

கௌரீஸஹிதபிம்பம் சேத் தத்கோணேஷ்வர்த்தபத்மவத் |
குண்டானி குர்யாச்சிஷ்டம் ப்ராகுக்தேனைவ ப்ரகல்பயேத் ||

குண்டலக்ஷணவத் குண்டாத் ஸர்வகுண்டானி தேசிக꞉ |
கோமயாலேபனம் க்ருத்வா பிஷ்டசூர்ணைரலங்க்ருதம் ||

ப்ராஹ்மணான் போஜயேத்தத்ர புண்யாஹம் வாசயேத்தத꞉ |
மஹேந்த்ராந்தம் பதம் யாவத் ஹோமம் க்ருத்வா விதானத꞉ ||

வேதிகாம் அக்நிகுண்டம் ச பர்யக்நிகரணம் சரேத் |

இவைகளின் மத்தியில் விருத்த (பெரிய) குண்டத்தைக் கல்பிக்கவேண்டும். இவ்விதமாக குண்ட நிர்மாணம் கூறப்பட்டிருக்கிறது. இது ஸாதாரணமாகக் கூறப்பட்டது. விசேஷமாக, மூர்த்தியானது கௌரீதேவியுடனிருந்தால் (அந்த குண்டங்களின்) கோணங்களில் அர்தபத்ரத்துடன் (பாதி இலை அல்லது பாதி இதழ்போன்ற வடிவத்துடன்) இருக்கவேண்டும். மற்ற குண்டங்களை முன்பு கூறியபடியே கல்பிக்கவேண்டும். தேசிகன், எல்லாக் குண்டங்களையும், அந்தந்த குண்டங்களுக்குக் கூறப்பட்டிருக்கும் லக்ஷணத்துடன் கல்பிக்கவேண்டும்.

பிறகு பசுவின் சாணத்தினாலே அந்த குண்டங்களை மெழுகி, அரிசிமாவினாலே அலங்காரம் செய்யவேண்டும். (கோலமிடவேண்டும்.) (12)

பிறகு அந்தவிடத்தில் பிராமணர்களுக்கு போஜனம் செய்துவைக்கவேண்டும். அதன் பிறகு புண்யாஹவாசனம் செய்யவேண்டும்.

(ஹோமத்திற்குக் கூறியுள்ள மந்திரத்தில்) மஹேந்திர என்ற பதம் வரையில், விதியுடன் ஹோமம் செய்து, வேதிகையையும் அக்நி குண்டத்தையும் பர்யக்நிகரணம் செய்யவேண்டும். ('அக்கினியுடன் வலமாகச் சுற்றிவர வேண்டும்.) (13½)

நிர்திஷ்டதிவஸாத் பூர்வராத்ரௌ ஸ்யாததிவாஸநம் ||

மத்யமே வேதிகாயாம் து அஷ்டத்ரோணைஸ்து ஶாலிபி: |
க்ருத்வா ஸ்தண்டிலம் தஸ்மிந் ஸாஷ்டபத்ரம் ஸகர்ணிகம் ||

தண்டுலைஸ்திலதர்ப்பைஶ்ச லாஜை: புஷ்பைரலங்க்ருதம் |
ஶயநம் அஹதேநைவ வஸ்த்ரேணைவ ப்ரகல்பயேத் ||

தூபதீபைஶ்ச புஷ்பாத்யை: கந்தைஶ்சாப்யர்ச்சயேத் |
ப்ராஹ்மணஸ்தஸ்ய மத்யே து தாருபீடம் ப்ர
(தம் ஸம்யக்)கல்பயேத் || ௧௫ ||

தஸ்யோபரி பஞ்சகவ்யை: ஸ்நாபிதம் ஶூலமாஹரேத் |
ப்ராக்முகம் ஸ்தாபயேத் ஶூலம் ஸம்யக் ஸகலமந்த்ரவித் ||

ஶுசிஹ்ய இதி மந்த்ரேண ...

சூலஸ்தாபநத்திற்குக் குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாள் இரவு அதிவாஸநம் (உபவாஸமிருந்து அந்த இடத்திலேயே வஸிக்கவேண்டும்) செய்யவேண்டும். (14)

மண்டபமத்தியிலுள்ள வேதிகையின்மீது 8 துரோணம் (த்ரோணம்—தூணி—4 மரக்கால்) நெல்லினாலே ஸ்தண்டிலத்தை (மேடையை) கல்பிக்கவேண்டும். அதில் (நடுவில்) கர்ணிகையும் 8 இதழ்களுமுடைய தாமரை மலரையும் கல்பிக்கவேண்டும். அதன்மேலே, அக்ஷதை, எள்ளு, தர்பம், பொரி, புஷ்பம், இவைகளாலே அலங்கரித்து, துவைக்காத (புதிதான) வஸ்திரத்தினாலே சயநத்தை (படுக்கையை)க் கல்பிக்கவேண்டும். அதை, தூபம், தீபம், புஷ்பம், சந்தநம், இவைகளாலே பூஜிக்கவேண்டும். பிராம்ஹணன் (ஆசார்யன்) அதன் மத்தியில் தாருபீடத்தை (மரத்தினாலான பீடத்தை) வைத்து, அதன் மேலே, பஞ்சகவ்யத்தினாலே அபிஷேகம் செய்யப்பட்ட சூலத்தை கிழக்குமுகமாக வைக்கவேண்டும். "சுசிஹ்ய"

ஸ்தாபயேத் தேவம் தேவீம் ச கந்தவாரிபி: ஸ்நாபயேத் ||

கௌதுகம் பந்தயேதேவ தயோர்தக்ஷிணஹஸ்தயோ: |
ஸ்வர்ணஜாவா ஸூத்ரஜா வா கவசேநைவ
பந்தயேத் || உ௦ ||

*ஶூலம் ப்ராக்சிரஸாயுக்தம் வாத்யத்வநிஸமாயுக்தம் ததா |
ஶயநே ஶாயயேச் சூலம் தீர்ககூர்ச்சம் உதக்
வக்த்ரகம் || உக ||

தஸ்ய வாமே ஹ்யுமாதேவீஶூலம் சைவ ஶாயயேத் ஸுதீ: |
தயோ: ஶிரோந்தி(கே) கே தேஶே ஸ்தாபயேத்து வ(க)ட-
த்வயம் || உஉ ||

என்ற மந்திரத்திலே (சூலத்தை) ஸ்தாபித்து, ஹ்ருதய மந்திரத்திலே, கந்தோதகத்திலே ஸ்நாநம் செய்வித்து தேவேசனையும் தேவியையும் ஸ்தாபனம் செய்யவேண்டும். கந்தம், புஷ்பங்களாலே பூஜிக்கவேண்டும். பிறகு, தேவேசன், தேவி, இருவர்களுடைய வலது கைகளில் கௌதுகபந்தநம் (ரக்ஷாபந்தநம்) செய்யவேண்டும். ரக்ஷா பந்தந ஸூத்திரமானது, தங்கத்திலேயாவது பஞ்சுநூலிலேயாவது இருக்கவேண்டும். கவசத்திலே ரக்ஷையைக் கட்டவேண்டும். (20)

(அதன் பிறகு) சிவசூலத்தை கிழக்குத் தலையாகவும், மேலேக்கிய முகமாகவும், நீண்டகூர்ச்சத்துடனும், வாத்தியகோஷத்துடனும் படுக்கையாக வைக்கவேண்டும். அதன் இடது பக்கத்தில் உமாதேவியின் சூலத்தை (முன் போலவே) படுக்கையாக வைக்கவேண்டும். அந்த 2 சூலங்களில் தலையின் முன்பக்கத்தில் 2 வஸ்திரங்களை (2 கடங்களை) வைக்கவேண்டும். அந்த கலசங்களில் நூல் சுற்றி

---

*த்ருஷ்டமேயஸமாயுக்தம், இதி ஸர்வஸ்தீகோசாயுக்ஷாத்ரகா
பாட: |

ஸூத்ரம் ஸவிதாநம் ச ஸகூர்சம் வஸ்த்ரவேஷ்டநம் (ஷ்டிதம்) |

த்ரோணகும்பாம்பஸம்பூர்ணம் சிவகும்பம் ததுச்யதே || ௨௩ ||

தஸ்யார்த்தம் தோயஸம்பூர்ணம் வஸ்த்ரைஸ் ஸூத்ராதிபி யுதம் |

கௌரீபீஜஸமாயுக்தம் கௌரீகும்பமிதம் ஸ்ம்ருதம் || ௨௪ ||

*தத்ர மூலேந ஸம்பூஜ்ய கும்பம் ந்யஸ்ய ஹ்ருதாதிபிரேவச |

கௌரீகும்பே து தஸ்யாஸ்து மந்த்ரம் ந்யஸ்ய விசேஷத: ||

பரிதோஷ்டௌ ந்யஸ்ய ஸூத்ராத்யைஸ்ஸு ஸமந்விதாந் |

கூர்ச்சங்கள் வைத்து, (கூர்ச்சம்–தர்பைகளாலே செய்யப் பட்ட ஒருவித முடிச்சு) வஸ்திரத்தைச் சுத்தவேண்டும்.

4 மரக்கால் ஜலத்துடன் கூடிய கலசத்திற்கு சிவ கும்பம் என்று பெயர். (சிவகலசத்தில் 4 மரக்கால் ஜலம் நிறைந்திருக்கவேண்டும் என்று பொருள்.) அதில் பாதி யளவு (2 மரக்கால்) ஜலத்துடன் நிறைந்திருப்பது கௌரீ கலசமாகும். இதுவும் சிவகலசத்தைப்போலவே ஸூத்திரம் முதலியவைகளாலே அலங்காரம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த கலசத்தில் கௌரீ பீஜத்துடன் (பூஜாதி களைச் செய்யவேண்டும்.) பரமேசுவரனுடைய மூலமந்திரத் தினாலே, பரமேசுவர கும்பத்தில் (ஆவாஹநாதிகள் செய்து) கந்தம் புஷ்பம் முதலியவைகளினாலே பூஜிக்கவேண்டும். கௌரீகும்பத்தில் விசேஷித்து கௌரீமந்திரத்தினாலே பூஜிக்கவேண்டும். (25)

இவ்விரு கும்பங்களைச் சுற்றிலும், நூல் முதலியவை களாலே அலங்கரிக்கப்பட்ட, 8 கலசங்களை வைத்து,

---

*மூலமந்த்ரம் சிவே கும்பே, உக்தி பாரஸ்து ஸ்ரீ ஸோமாஞ்யஸ்ய பாதகா வா: |

வித்யேஶாந் ஶிவாங்கைஶ்சாவாஹ்ய கந்தாதிபி: யஜேத் ||

வாஸ்துஹோமாதிகம் குண்டே அக்நிம் ஸம்ஸ்தாப்ய தேஶிக: |
அக்ந்யாதாநாதிகம் ஸர்வமக்நிகார்யம் ஸமாசரேத் || ௨௭ ||

அக்ந்யஶ்வத்தம்(ப்லக்ஷம்)பூர்வகுண்டே து வஹ்நிஶமீம்
ஸமாஹரேத் |
யாம்யே ஔதும்பரம் ப்ரோக்தம் கதிரம் நைர்ருத்யே ஸ்ம்ருதம் ||

பிம்பம்(பில்வம்)பஶ்சிமே து மயூரம் வாயவே
ஸமாஹரேத் |
வ(வ)டம் சைவ ஸௌம்யகுண்டே து கதிரம் வாஸ்து
தேஶிக: (ஈஶகுண்டகே) || ௨௯ ||

ப்ரதாநே ப்ரஹ்மவ்ருக்ஷ: ஸ்யாத் ஸமிதஶ்வி(த்தமஶ்வ)
(ஹோமம்)ஸமஸ்ததம் |

அவைகளில் வித்தியேசர்களை (சிவ ஆவரண தேவதைகளை) ஆவாஹநம் செய்து கந்தம் முதலியவைகளினாலே பூஜிக்க வேண்டும். (26)

குண்டங்களில் அக்நி ஸ்தாபநம்செய்து அக்கியாதாநம் முதலான அக்நி கார்யங்களைச்செய்து, வாஸ்து ஹோமம் முதலியவைகளையும் செய்யவேண்டும். (27)

கிழக்கேயுள்ள குண்டத்தில் அரசஸமித்தினாலும் அக்நி திக்கிலிருக்கும் குண்டலத்தில் வந்ஹி (சமீ) ஸமித்தினாலும், தெற்கு திக்கிலுள்ள குண்டத்தில் அத்தி ஸமித்தினாலும், தென்மேற்கு திக்கிலுள்ள குண்டத்தில் கருங்காலி ஸமித்தினாலும், மேற்கு குண்டத்தில் பில்வ ஸமித்தினாலும், வாயு குண்டத்தில் மயூர(நாயுருவி) ஸமித்தினாலும், வடக்கு குண்டத்தில் வட (ஆலமரத்தின்) ஸமித்தினாலும், ஈசான குண்டத்தில் கருங்காலி ஸமித்தினாலும் ஹோமம் செய்ய வேண்டும். பிரதாந குண்டத்தில் அரச ஸமித்தினாலே ஹோமம் செய்யவேண்டும். இந்த ஸமித்துக்களாலே செய்யப்படும் ஹோமமானது ஒரே ஸமயத்தில் 8 குண்டங்களி

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍁𑌣𑍍𑌡𑍇𑌷𑍁 𑌕𑍁𑌣𑍍𑌡𑌾𑌨𑌿(𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁)𑌗𑍌𑌰𑍀𑌹𑍀𑌨𑌾𑌨𑌿
𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ ௰ ॥

𑌸𑌮𑌿𑌧𑍋 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌨𑍈𑌵 𑌪𑍌𑌰𑍁𑌷𑍇𑌣 𑌘𑍃𑌤𑌾𑌹𑍁𑌤𑍀𑌃 ।
𑌅𑌘𑍋𑌰𑍇𑌣 𑌅𑌨𑍍𑌨𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁(𑌤𑍍𑌵𑌾)𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌮𑍇𑌨
𑌹𑍋𑌮𑌯𑍇𑌤𑍍 ॥ ௰௧ ॥

𑌈𑌶𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌤𑌿𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌹𑍋𑌮𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌷𑌪𑌂 𑌕𑌵𑌚𑍇𑌨𑍈𑌵 𑌶𑌿𑌖𑌾𑌯𑌾𑌂 𑌮𑌙𑍍𑌗𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௰௨ ॥

𑌮𑍂(𑌲)𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂(𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂)
𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌚𑍍𑌛𑌤𑌂 𑌶𑌤𑌮𑍍 ।
𑌉𑌕𑍍𑌤𑍇(𑌹𑍋𑌮𑌾𑌨𑍍𑌤𑍇)𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑍀
𑌦𑍇𑌵𑌯𑍋𑌃 𑌸𑌮𑌮𑍍 ॥ ௰௩ ॥

லும் செய்யப்படவேண்டும். வித்தியேசர்களின் குண்டங்களில் கௌரீதேவியல்லாமல் ஹோமம் செய்யவேண்டும்.

ஸமித்துக்களை ஹ்ருதய மந்திரத்தினாலேயும் நெய்யை புருஷமந்திரத்தினாலேயும் அன்னத்தை அகோர மந்திரத்தினாலேயும் ஹோமம் செய்யவேண்டும். (பிறகு) முதலாவதாகக் கூறப்பட்ட ஸமித்தை வாமதேவ மந்திரத்தினாலேயும் சருவை (அந்நத்தை) ஈசாந மந்திரத்தினாலேயும் எள்ளை சிரோமந்திரத்தினாலேயும் கடுகை கவச மந்திரத்தினாலேயும் ஹோமம் செய்யவேண்டும். சிகையானது மங்களம் என்று கூறப்படுகிறது. (சிகாமந்திரத்தினாலே மங்கள ஹோமத்தைச் செய்யவேண்டும் என்பது பொருள்). ஹோமத்திற்குக் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொன்றையும் 100, 100 தடவை மூலமந்திரத்தினாலே ஹோமம் செய்யவேண்டும். ஹோமம் செய்து முடித்தபிறகு வியாஹ்ருதிகளினாலே ஹோமம் செய்யவேண்டும். ஸ்வாமிக்கும் தேவிக்கும் ஸமமமாக ஹோமம் செய்யவேண்டும். (அதன்

ஜயாத்யாஹுதீர் ஹுத்வா ஹ்யப்யாதாநம் ராஷ்ட்ரப்ருதம் ஹோமயேத் ।
திக்பாலாந் ஸ்துத்வா(ப்யபநம்) வேதைர(மந்த்ரை)ருபநிஷத்வைரேவ ச
ஸ்துத்வா(ஸ்த்ரா)திக்பாலாந் ஸம்யக் ॥ ௩௪ ॥

ஏகாக்ரமநஸா த்யாத்வா(த்யாத்வா) தேவீம் தேவேசமேவ ச ।
தேவதேவஸ்ய மூலேந உபாம்ஸுநா ஆஹுதீ: ॥ ௩௫ ॥

ஹுத்வாஷ்டாதச ஸங்க்யாதா ஆஹுதீர் ஹோமயேத் ஸுதீ: ।
பஸ்சாச்சிவத்விஜகுலோத்பவ ஆசார்யோ பஸ்மஸ்நாநஸமாசரேத் ॥ ௩௬ ॥

பஸ்மஸ்நாநம் ஸமாசர்ய ஸுக்லவாஸோத்தரீயக: ।
ஸுக்லயஜ்ஞோபவீதீ ச ஸுக்லகந்தாநுலேபந: ॥

சுக்லமால்ய: ஸிதோஷ்ணீஷ: ஸுக்லாபரணபூஷித: ।
ஸகலீக்ருததேஹஸ்து(விஸேஷக)லகஷ்ருகருதவிக்ரஹ: ॥

ஸுவர்ணாங்குலீய: ஸோத்தரீய: பவித்ரகராந்வித: ।
* ஸுவர்ணகுண்டல மஹார்ஹ மகுடம் ச கங்கணம் பரிதம் கண்டே
(அபி ச) ॥ ௩௮ ॥

பிறகு) ஜயாதிஹோமமும் அப்யாதாந மந்திரஹோமமும் ராஷ்ட்ரப்ருத் மந்திர ஹோமமும் செய்யவேண்டும். (33½)

வேதமந்திரங்களாலேயும் உபநிஷத் மந்திரங்களாலேயும் திக்தேவதைகளைத் துதித்துப் பிறகு, ஏகாக்ரமான மனத்துடன் தியானம் செய்து, தேவீ, தேவேசன் இவர்களின் மூலமந்திரத்தினாலே உபாம்சுவாக (மனதிற்குள் ஜபித்துக்கொண்டு) நெய்யினாலே 18 ஆஹுதிகள் (ஹோமங்கள்) செய்யவேண்டும். பிறகு, சிவதுவிஜகுலத்திலுதித்த ஆசார்யன், பஸ்மஸ்நாநம் செய்து வெண்மையான ஆடையணிந்து, வெண்மையான (புதிதான) யஜ்ஞோபவீதம் தரித்து வெண்மையான சந்தனமும் புஷ்பமாலையும்

---

* ஸுவர்ணஸம்ஹிதம் ஸூத்ரேண ஸம்பத்தமாஹுதிசதம் ஸமாப்ய ।
உத்தரீயஸஹிதவாஸ: ஸுவர்ணபவித்ரத: ஸம்பந்நம் ஸுவர்ணதீக்ஷாமு
த்ராங்குலீயகாரயாம் த்ருப்யதே ।

𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌾𑌖𑍍𑌯𑌪𑌦𑌂 𑌵𑌾𑌥 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑍇 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 (𑌜𑍍𑌞𑍇𑌯𑌂) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌦𑌯𑌂 𑌵𑌰𑌮𑍍 ॥ ௩௮ ॥

𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌦𑍈(𑌦𑍈)𑌵𑌿𑌕𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌆𑌸𑌨𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌪𑌦𑍇 ।
𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌪𑌰𑌭𑌾𑌗𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥

𑌆𑌸𑌨𑌂 𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑍇 (𑌤𑍁) 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌵𑍇𑌦𑌿𑌕𑍋𑌪𑌰𑌿 ।

அணிந்து, பஞ்சபூஷணங்களை அணிந்து பவித்திரம் தரித்துக்கொண்டு, விதியுடன் ஸகலீகரணம் செய்துகொண்டு, *தெளிந்த முகமுடையவனாக, கர்பகிருஹத்தில் சென்று ஏகாசீதி பதங்களைக் கல்பிக்கவேண்டும். (ஏகாசீதிபதம்—81 கண்டங்கள்.) (38)

கர்பகிருஹத்தில் மண்டூகபதத்தையாவது ஸப்தஸப்த பதத்தையாவது கல்பித்து, பிரஹ்மோதயத்தை அறிந்து கொள்ளவேண்டும்.*

ஸ்தாநக பிம்பத்தை தைவிகாம்சத்திலும் ஆஸந பிம்பத்தை மாநுஷபதத்திலும் வைக்கவேண்டும். தேசிகோத்தமன் (இவைகளை) கர்பகிருஹத்தின் பரபாகத்தில் (பின்பகுதியில்) ஸ்தாபிக்கவேண்டும்.

ஆஸநமூர்த்தியானால் பத்திரபீடத்திலும் ஸ்தாநக

---

* ஸ்விஷ்டமக்நே என்ற மந்திரத்தினாலே ஹோமம் செய்து, பிறகு பூர்ணாஹுதிஹோமம் செய்யவேண்டும் என்று அதிக பாடமானது, ஸரஸ்வதிமஹால் புத்தகத்தில் இருக்கிறது.

*கர்ப கிருஹத்தின் விஸ்தாரத்தை கிழக்கு மேற்கில் 9 கண்டங்களாகவும், தெற்கு வடக்கில் 9 கண்டங்களாகவும் செய்யவேண்டும். இதற்கு மண்டூகபதம் என்ற பெயர். இவ்விதமாகவே 7, 7 கண்டங்களாகச் செய்தால் அதற்கு ஸப்த ஸப்தபதம் என்று பெயர். நவநவ பதங்களில் $9 \times 9 = 81$ பதங்களாகும். ஸப்தஸப்த பதங்களில் $7 \times 7 = 49$ பதங்களாகும். இவைகளில் மத்திய பதத்திற்கு பிரஹ்மபதம் என்று பெயர். இதையே, பிரஹ்மாம்சம் என்று கூறப்பட்டிருக்கிறது.

ப்ராமமூர்த்தியுதா வேதிகாயாமதாபி வா || ௪௧ ||

கர்தவ்யம் ஸமானம் தஸ்மிந்து பூர்வோக்தவதிதம் ந்யஸேத் ।
வேதிகாஸம்ப்ரவாஹம் து பூர்வோக்தவத்ஸமம் ததா || ௪௨ ||

ஸமம் பாதாயதம் வாபி தத்விஸ்தாரம் ததர்தம் ஹிவேத் ।
ஸ்தாநகம் ஸகலம் சேத்து பாதாதஸ்தாச் சிலோபரி ||௪௩||

ரத்நந்யாஸார்த்தம் து நிம்நகர்தம் ப்ரகல்பயேத் ।
நிம்நம் ஷடங்குலம் வ்யாஸம் த்ர்யங்குலம் ஸ(ரத்நஸ்வர்ண)
மணிமங்குலம் || ௪௪ ||

ரத்னாநி நவ ரத்நாநி ஹேமபாத்ரே விநிக்ஷிபேத் ।
பாதமூலாததஸ்தாச்ச ஷண்மாத்ரம் வா யதாவிதி || ௪௫ ||

மூர்த்தியானால் வேதிகையின் மீதும் இருக்கவேண்டும். பீடத்தின் அகலம் உயரம் முதலியனவைகளை முன்பு கூறியுள்ளபடியே கொள்ளவேண்டும். அந்த பீடத்தை அழகாகச் செய்யவேண்டும். அதில் ஆதார சிலையைக் கல்பிக்க வேண்டும். (41½)

ஆதாரசிலையானது, பீடத்தின் அகலத்தில் ¾ பங்கு இருக்கவேண்டும். பீடத்தின் முழு அகலமிருப்பதுமாகும். அதன் கனமானது அகலத்தில் ஸரிபாதியளவு இருக்க வேண்டும்.

ஸகல பிம்பமானது ஸ்தானகமாக இருந்தால், அதன் பாதத்திற்குக் கீழேயிருக்கும் ஆதார சிலையில், ரத்னங்களை வைப்பதற்காக குழியைக் கல்பிக்கவேண்டும். அந்தக் குழியின் தாழமானது 6 அங்குலமிருக்கவேண்டும். (அதன் அகலம்) 3 அங்குலமிருக்கவேண்டும். அந்தக் குழியினுள் நவரத்நங்களை வைக்கவேண்டும். (அந்த ரத்நங்களை) ஸுவர்ண பாத்திரத்தில் வைப்பதுமாகும். சூலத்தின் பாததலத்திற்குக் கீழே(யுள்ள குழியானது) 6 அங்குலம்

ப்ராகேவ கர்பேண யோஜ்யாத் ஶூலஸ்தாபநாத் ப்ரயத்நத: |
ப்ரவிசேத் கர்பகேஹம் து மூலமந்த்ரம் ஸமுச்சரந் ||

ஶூலம் ஸ்தாப்ய து ததா ஸம்யக் மூலமந்த்ரம் ஜபந் ததா (ஜபந்) |
அஷ்டபந்தம் த்ருடம் க்ருத்வா ஸுதயா ச விசேஷத: ||௪௭||

தஸ்ய வாமே ததா ஸ்தாப்யம் கௌரீஶூலம் விசேஷத: |
ஆதாரஶிலாயாம் ச கர்பபாஜநஸம்யுதம் || ௪௮ ||

*பஞ்சஷட்ஸப்தமாத்ரம் வா கர்பவ்யாஸம் ததா(ஸாயதம்) ஸமம் |
கர்பந்யாஸம் து தத்ரைவ கர்பபாஜநஸம்யுதம் ||

உயரமுள்ளதாக இருக்கவேண்டும். இந்த ரத்நங்களை சூலஸ்தாபனத்திற்கு முன்னமேயே, அது உறுதியாக இருக்கும்படி செய்யவேண்டும்.

மூலமந்திரத்தை ஜபித்துக்கொண்டு கர்பகிருஹத்திற்குள் செல்லவேண்டும். (46)

சூலத்தை, மூலமந்திரத்தை ஜபித்துக்கொண்டு அதற்குரிய ஸ்தாநத்தில், உறுதியாக இருக்கும்படி வைக்கவேண்டும். பிறகு, அஷ்டபந்தநம் சாத்தி, அதை உறுதியாக இருக்கும்படி செய்து, பிறகு விசேஷித்து ஸுதையிலேயும் உறுதி செய்யவேண்டும்.

அந்த சூலத்தின் இடது பக்கத்தில், விசேஷித்து கௌரீ சூலத்தை ஸ்தாபநம் செய்யவேண்டும். அதன் ஆதார சிலையின் (முன்பு கூறியதுபோலவே) கர்ப பாஜநத்தை (நவரத்னங்களுடன் கூடிய ஸுவர்ண பாத்திரத்தை)வைக்கவேண்டும். அதன் கர்பவியாச மானது (கர்பவியாஸமும் உயரமும்) 5, 6, அல்லது அங்குலம் ஸமமாக இருக்கவேண்டும். அந்த கர்பத்திற்கு கர்பபாஜநமிருக்கவேண்டும். அதை முன்பு கூறப்பட்ட

---

*பஞ்சதாலாதிரேகாயாம: ஸூத்ரவர்கேஷ்வயம் க்ரம: |

[illegible] ॥ ௫௦ ॥

[illegible] ॥ ௫௧ ॥

[illegible] ॥ ௫௨ ॥

*[illegible]

கந்தம் புஷ்பங்களாலே பூஜிக்கவேண்டும். முன்பு கூறப்பட்டபடியே, (தேவீ சூலத்தையும்) மூலமந்திரத்தை ஜபித்துக்கொண்டு, கர்பபாஜநமிருக்கும் ஆதார சிலைக்குமேலே வைக்கவேண்டும். [முன் கூறப்பட்டதுபோலவே அஷ்டபந்தநம் முதலியவைகளைச் சாத்தி உறுதிப்படுத்தவேண்டும் என்று கொள்ளவேண்டும்.] (50)

பிறகு, பாக்கியுள்ள காரியங்கள் யாவும் சில்பிகளாலேயே செய்யப்படவேண்டும். சில்பியானவன், விசேஷித்து லக்ஷணமாக இருக்கும்படி செய்யவேண்டும். இங்கு சில்பி என்பது ஸ்தபதியேயாம். சித்திரகர்மாக்களையறிந்த யோக்கியனான ஸ்தபதியானவன், இவைகளைத் தானே செய்யவேண்டும். மற்றவர்களைக்கொண்டு செய்யும்படி செய்யக்கூடாது. அப்படிக்கு வேறுவிதமாகச் செய்யப்பட்டால் கர்த்தாவின் எண்ணம் நிறைவேறாது. (52)

* அந்தவிடத்திலேயே, ஆசார்யனுக்கு வஸ்திரம்

*[illegible]

* அந்தவிடத்தில் ஆசார்யனுக்கு 5 நிஷ்கம் ஸுவர்ணத்தை பரிசாகக் கொடுக்கவேண்டும் என்பது அச்சிட்ட புஸ்தகத்தில் உள்ள பாடம்.

K. 53.

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌰 𑌪𑌞𑍍𑌚𑌨𑌿𑌷𑍍𑌕𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌮𑍍 ।
𑌶𑍂𑌲𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌰𑌜𑍍𑌜𑍁𑌬𑌨𑍍𑌧𑌮𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 ॥ ௫௩ ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌶𑍂𑌲𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌚𑌤𑍁𑌰𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

ஸுவர்ணமோதிரம் இவைகளை பரிசாகக் கொடுத்து, 5 நிஷ்கம் ஸுவர்ணத்தை தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். இவ்விதம் சூலஸ்தாபநம் கூறப்பட்டிருக்கிறது. இனி ரஜ்ஜு பந்தநத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (53)

காசியபீய சில்ப சாஸ்திரத்தில் சூலஸ்தாபனவிதி
என்னும் எண்பத்திநான்காவது படலம் முற்றும்.



|| அத பஞ்சாஶீதிதம: படல: ||

ரஜ்ஜுபந்தநவிதி: ||

அத வக்ஷ்யே விஶேஷேண ரஜ்ஜுபந்தம் ஸவிஸ்தரம் ।
ஸர்வேஷாம் ஶூலஸந்தீநாம் தாம்ரபத்ரை:
ஸுவேஷ்டயேத் || 1 ||

ஶூலேऽஷ்டபந்தமாலிப்ய ரஜ்ஜுபந்தம் தத: பரம் ।
ஶ்ரீவேஷ்டகம் குந்துருஷ்கம் ச குக்குலும் ச குடம் ததா ||

ஸர்ஜகம் கைரிகம் தைலம் க்ருதம் சாஷ்டபந்தநம் ।
ஶ்ரீவேஷ்டகம் சதுர்பாகம் குந்துருஷ்கம் பாகாம்ஶகம் ||

பாகார்தம் குக்குலும் பஞ்சபாகம் ச ஸகாம்ஶபாகாஷ்டகே ।
ஸர்ஜகம் சைவ த்வ்யம்ஶம் கைரிகம் து பாகாம்ஶகம் ||

ஷடேதத் ஸர்வத்ரவ்யாணாம் து க்ருதவாஜ்யைஸ்தைலமிஶ்ரிதம் ।

எண்பத்தைந்தாவது படலம்.

ரஜ்ஜுபந்தந விதி.

இனி, ரஜ்ஜு பந்தநவிதியை விசேஷித்து விரிவாகக் கூறுகிறேன். சூலத்தின் ஸந்திகள் எல்லாவற்றிலும் செப்புப்பட்டைகளை அழுத்தமாகச் சுற்றி ஸந்திகளை வலுப்படுத்தவேண்டும். (1)

பிறகு, சூலத்தில் அஷ்டபந்தநத்தைப்பூசி, அதன் பிறகு ரஜ்ஜு பந்தநம் செய்யவேண்டும்.

ஸ்ரீவேஷ்டகம் (திருவட்டம் பிசின்) 1, குந்துருக்கம் (பூனைக்கண் குங்கிலியம்) 2, குக்குலம் (குங்கிலியம்) 3 வெல்லம் 4, ஸர்ஜகம் (ஸர்ஜக்ஷாரம்) 5, கைரிகம் (பூங்காவி) 6, நல்லெண்ணை 7, நெய் 8, இவைகள் 8ம், அஷ்டபந்தந திரவியங்களாம். (4)

இவைகளில், திருவட்டம் பிசின் 4 பங்கு, பூனைக்கண்

ஶூலஸ்யாத்ர ததா விநிக்ஷிப்ய பஶ்சாத் க்ஷௌத்ராதிகம்
(ரஜ்ஜும் யயா) பதேத் || ரு ||

தஸ்யை(தை)வ ப்ராங்முகோபரிஷ்ய ரஜ்ஜுபந்தம் ததஃ சரேத் |
ரஜ்ஜுபந்தஸ்ய நாடிகா த்ரயம் ஸ்யாதூர்த்வகமம் க்ரியா ||
[ரஜ்ஜுபந்தே நாபிமத்யாச்ச நாட்யூர்த்வகமனாஃ க்ரியா |]

ஸுஷும்நா மத்யமா ப்ரோக்தா பிங்களா தக்ஷ(த்ர)க்ஷிணா |
இடா சைவ வாமபார்ஶ்வே து ப்ரதானோர்த்வகாமினஃ ||

குங்கிலியம் 3 பங்கு, குங்கிலியம் 5 பாகம், வெல்லம் 1 பாகம், ஸர்ஜக்ஷாரம் 8 பாகம், பூங்காவி 3 பாகம், கணக்குடன் எடுத்துக்கொண்டு இந்த 6 திரவியங்களையும் நன்கு தூள் செய்து அத்துடன் நெய்யும் எண்ணையும் வேண்டுமான அளவுக்குவிட்டு நன்கு பிசைந்து அதை மண் பாண்டத்தில் வைத்துக் காய்ச்சவேண்டும். அது நன்கு இளகிச்சேர்ந்து, சிறந்த (கொம்புத்)தேன் பதத்திலிருக்கும் பொழுது அந்த அஷ்ட திரவிய கல்கத்தை எடுத்து சூலத்தின் மேலே எங்கும் பூசவேண்டும். அதன்பிறகு சூலத்தின் மேலே ரஜ்ஜுபந்தநம் செய்யவேண்டும். (5½)

ரஜ்ஜுபந்தநத்தில் நாபிமத்தியிலிருந்து மேனோக்கிச் செல்லும் நாடிகள் மூன்றுகளாம். (ரஜ்ஜுபந்தநம் செய்யும்பொழுது முதலில் நாடிகளைப்போன்று 3 கயிறுகளைக்கல்பித்து அவைகளை நாபிமத்தியத்திலிருந்து மேனோக்கிச்செல்லுகிறவைகளாக சூலத்தில் வைத்துக்கட்டி அதற்குமேலே ரஜ்ஜுபந்தநம் செய்யவேண்டும் என்பது பொருள்)

அந்த 3 நாடிகளில் மத்தியிலிருக்கும் நாடிக்கு "ஸுஷும்னை" என்று பெயர் அதன் வலது பக்கத்திலிருக்கும் நாடிக்கு "பிங்களை" என்று பெயர். இடது பக்கத்திலிருக்கும் நாடிக்கு 'இடை" என்று பெயர். இந்த 3 நாடிகளும் மேனோக்கிச்செல்லும் ' நாடிகளில் முக்கியமானவைகளாகும். (7)

அஸ்யம் மாஸும் (ஷியவம்) து வர்ணாஹயாக்ருதாரமெவ
த்ரிவர்த்திகா: ।
தேஷாம் நாடீத்ரயாணாம் து மூலம் மேட்ராவஸாநகம் ||

தேநாஷ்டாதசதா ஜ்ஞேயா நாடீமேட்ராதுபஸ்ருதா: ।
விமலா கோஷிணீ ப்ருத்வீ வாஹிநீ தேஜஸா ததா || ௯ ||

வாயஸீ தமநீ சைவ மர்திநீ கோஷிணீ ததா ।
ரஸவர்த்தி ம்ருதங்கீ ச ஸ்ரம்ஸிநீ ச ததைவ ச || ௰ ||

சப்தஸ்பர்சாதிவர்ணா ச ஸம்ஹாரீ வாரிதாரிணீ ।
வாஹிநீ தாமஸீ ஸாக்ஷாத் த்ரிஷஷ்டிஸம்க்யா விபாகத: ||

[தேஷாம் ஷோடசமுக்யாநாம் நாட்யோ மேட்ராதுபஸ்ருதா: ।
விமலா கோஷிணீ ப்ருத்வீ வாஹிநீ சைவ தேஜஸீ ||

வாயஸீ தமநீ சைவ மர்திநீ கோஷிணீ (ரோதிநீ) ததா ।
ரஸவர்த்தி (வாஹீ) ம்ருதங்கீ ச ஸ்ரம்ஸிநீ ச ததைவ ச ||

சப்தஸ்பர்சாங்கீ பூர்ணா ச ஸம்ஹாரீ (ஸம்ஹாரீ)
வாரிதாரிணீ ।

வாஹிநீ தாமஸீ சைவ த்ரிஷஷ்டிஸம்க்யா விபாகத: ||]

இந்த 3 நாடிகளும் 2 அங்குலம் (2 யவை) சுற்றளவு உள்ளவைகளாகும். (2 யவை பருமனில் கல்பிக்கப்பட வேண்டும்.) இம்மூன்று நாடிகளின் அடிப்பக்கமானது மேட்ரம் (ஆண்குறி) வரையில் நீண்டு இருப்பதாகும். (8)

மேட்ர மூலத்திலிருந்து 18 நாடிகளாகப் பிரிந்துசெல்லுகின்றன. அந்த நாடிகளின் பெயர் முறையே விமலே 1, கோஷிணீ 2 ப்ருத்வீ 3, வாஹிநீ 4, தேஜஸீ 5, வாயஸீ 6, தமநீ 7 மர்திநீ 8, கோஷிணீ (ரோதிநீ ரோஹிணீ) 9, ரஸவர்தி (ரஸவாஹீ) 10, ம்ருதங்கீ 11, ஸ்ரம்ஸிநீ 12, சப்தஸ்பிநசாங்கீ 13, பூர்ணா 14, ஸாஸிம்ஹீ (ஸம்ஹாரீ) 15, வாரிதாரிணீ 16, வாஹிநீ 17, தாமஸீ 18 என்பனவாகும்,

षट् षट्कं त्रियवव्यासाः त्रि त्रि वर्त्मविवर्तकाः ।
दक्षोर्वाद्या पार्श्वनाडी तु सव्येतरोरुजङ्घयोः ॥ १२ ॥

ऊरुजङ्घे तु कृत्वावृत्य वर्तन्ते नलकान्तकम् ।
[षट् षट्कं त्रियवव्यासाः त्रि त्रि वर्त्मगाः त्रिवर्त्मगाः ॥
दक्षोर्वाद्या पार्श्वनाड्यस्तु सव्येतरोरुजङ्घगाः ।
ऊरुजङ्घं समावृत्य वर्तन्ते नलकान्तकम् ॥]
पिङ्गलामूल(संभूताः) षडेताः सा(ता)श्च वामोरु-
जङ्घकं(काः) ॥ १३ ॥

सप्तस्पृगादि तु(सप्तस्पृशादि) षट्संख्या इडा-
जाता संस्थिता(ः) ।
दक्षिणे पार्श्वनाडीनां मार्गवत् तु संवृत्य(त्य)
वक्ष ॥ १४ ॥

नलकान्तं समावृत्य षण्णामेकैकं
वर्तते ।

அந்த நாடிகள் ஒவ்வொன்றும் 3 யவை விஸ்தாரம் (பருமன்) உடையவைகளாகும். இவைகள் 6, 6, நாடிகள் வீதம் 3 பிரிவுகளாகப் பிரிந்து 3 வழிகளில் செல்லுகின்றன. இவைகளில் முதலில் கூறப்பட்ட 6 நாடிகள் வலது துடைக்குச் செல்லுகின்றன. அங்கு அவைகள் அடித்துடையைச்சுற்றிக்கொண்டு, கணுக்கால் வரையில் சென்று கணுக்காலில் சுற்றிக்கொண்டிருக்கின்றன. (12½)

இந்த நாடிகள் 6ம், "பிங்களை" என்னும் நாடியின் அடியிலிருந்து பிரிந்தவைகளாம். சப்தஸ்பிருசாங்கீ முதலிய 6 நாடிகள் "இடை" என்னும் நாடியிலிருந்து, பிரிந்தவைகளாகும். இந்த 6 நாடிகளும் வலது காலில் கூறப்பட்டதைப்போல (இடது காலின் துடையில் சுற்றிக் கொண்டு அங்கிருந்து) கணுக்கால் வரையில் வந்து, ஒன்று

[illegible] || [illegible] ||

[illegible] |
[illegible] || [illegible] ||

[illegible] |
[illegible] || [illegible] ||

[illegible] |
[illegible] || [illegible] ||

[illegible] |
[illegible] ||]

கூடி கணுக்காலைச்சுற்றிக் கொள்ளுகின்றன. இவைகள் நீங்கிய மத்தியிலுள்ள 6 நாடிகளும் "ஸுஷும்னை" நாடியிலிருந்து பிரிந்தவைகளாகும். இவைகள் வம்சதண்டத்தின் இருபக்கங்களின் வழியே மேலேறிச்சென்று பார்சுவ தண்டங்களின் வழியாகக் குறுக்கே சென்று பாஹு மூலங்களை அடைகின்றன. (15½)

மத்திய நாடிகள் 6 களில் "கமநீ-மர்தநீ-ரோஹிணீ" என்ற 3 நாடிகள் வலது கைக்குச் செல்லுகின்றன. "ரஸவாஹீ-மிருதங்கீ-ஸ்ரம்ஸிநீ" என்ற 3 நாடிகளும் இடது கைக்குச் செல்லுகின்றன. இவைகள் பாஹுமூலத்தைச் சுற்றிக்கொண்டு ஒரே நாடியைப்போல் ஆகின்றன. அதன் நுனியிலிருந்து 8 கிளைகளாகப்பிரிந்து கையின் நுனி வரையில் செல்லுகின்றன. அதன் நுனிகள் ஒன்றுகூடி

[illegible] ॥ ௧௯ ॥

[illegible] ।
[illegible] ॥ ௨௰ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
*[illegible] ॥

[illegible] ।

மணிக்கட்டில் (வலமாக) ச்சுற்றிக்கொள்ளுகின்றன. இவ்விதமாக இரண்டுகைகளிலும் நாடிகள் இணைந்திருக்கும்படி கல்பிக்கவேண்டும். இவ்விதமாக ப்ரதிமைகளுக்கு 28 நாடிகள் கூறப்பட்டுள்ளன.

தந்திரங்களையறிந்த சில்பியானவன் முக்கியமான இந்த 28 நாடிகளையும் இங்கு கூறியுள்ளபடியே கல்பிக்க வேண்டும் (20)

அந்த நாடிகள் ஒவ்வொன்றிலும் 8 நாடிகள் பிரிகின்றன. அவைகளிலிருந்து பிரியும் நாடிகள் பல. அந்த நாடிகளெல்லாம் ஸகல அங்கங்களுக்கும் செல்லுகின்றன. இவ்விதமாக சரீரத்திலுள்ள நாடிகள் 72000 என்று கணித்துக் கூறப்பட்டிருக்கின்றன. உறுதியான மரப்பட்டைகள் அல்லது நாறுகளாலே திரிக்கப்பட்ட, நாடிகளாலே (நாடிகளைப்போன்ற கயிறுகளாலே) இறுக்கிக்கட்டப்பட்ட சூலங்கள் நெடுங்காலம் உறுதியுடனிருப்பவைகளாகும்

முழுமையும் சுண்டாமல் ஸ்வல்பம் நீருள்ள முத்தலான்

---

*[illegible] ।
[illegible] ।

அப்⁴யந்தரம் ம்ருது³த்வா து ஸாராத்³ரஜ்ஜும் வ்யபோஹ்ய ச ||

நாட்³யஸ்த்வபி ஸங்க்லுப்த்ய பஸ்தாதா³வ்ருதநாடி³கா: |
ஷட்³யவம் து பரீணாஹம் ரஜ்ஜ்வாதா⁴ரம் ப்ரகல்பயேத் || உச ||

*பஸ்தாங்கீ³ரஜ்ஜுகம் ரஜ்ஜும் ப³ந்த⁴யேத் த³க்ஷிணாவ்ருதம் |
ஹ்ருத்பத்³மம் ஸாஷ்டபத்ரம் து ரஜ்ஜுநா ப³ந்த⁴யேத்
ப³த⁴: || உரு ||

தஸ்ய நாலம் து நாப்⁴யந்தம் யோஜ்யம் ஸுஷும்நயா ஸஹ |
ஜீவஸ்தா²நம் து தத்பத்³மமித்யுக்தம் ஹி ஸுஷும்நயா || உசு ||

உபரிஷ்டாத்ருதஸ்யாத்ர ரஜ்ஜுப³ந்த⁴ம் தத: குரு |

தேங்காயிலுள்ள அழுத்தமான நாறுகள் நீங்கலாக, சோறு முதலியவைகளை நீக்கிவிட்டு, அதில் ஸாரமான நாறுகளை எடுத்து, அவைகளாலே நாடிகளைக் கற்பிப்பதற்கான கயிறுகளைக் கல்பித்துக்கொள்ளவேண்டும். அந்த நாடிகளையும் (சூலத்தில் வைத்து இணைத்து பிறகு அதன்மேலே) சுத்திக் கட்டவேண்டிய கயிறுகளையும் கல்பித்துக்கொள்ள வேண்டும். அந்தக் கயிறானது 6 யவை பருமனுடையதாக இருக்கவேண்டும். (24)

பிறகு, நாடிகளுடன்கூடிய சூலத்தை கயிறுகளாலே வலமாகச் சுற்றி இடுக்கு விழாமல் இருக்கிக்கட்டவேண்டும்.

கயிற்றாலேயே 8 இதழ்களுடன்கூடிய ஹிருத்பத்மத்தைக் கல்பிக்கவேண்டும். அதை ஹிருதயஸ்தானத்தில் "ஸுஷும்நா" நாடியுடன் சேர்த்துவைத்துக் கட்டவேண்டும். அதன் நாளமானது (அடிக்காம்பானது) தொப்புள் வரையில் இருக்கவேண்டும். இந்த ஹிருதய பத்மமே ஜீவஸ்தானமாகும். (இதையும் ஸுஷும்நா நாடியுடன் வைத்துக்கட்டி அதன்பிறகே கயிறு சுற்றவேண்டும்.)

---

*பஸ்தாத்³ரஜ்ஜுரஜ்ஜுஹஸ்தம் இதி பாடா²ந்தரம் |

𑌰𑌜𑍍𑌜𑍁𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌧𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌰𑌜𑍍𑌜𑍁𑌬𑌨𑍍𑌧𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

ரஜ்ஜுபந்தநம் செய்யும்பொழுது மூலமந்திரத்தை ஜபிக்கவேண்டும். இவ்விதமாக ரஜ்ஜுபந்தந விதியானது கூறப்பட்டிருக்கிறது. இனி மிருத்ஸம்ஸ்காரத்தைக் கூறுகிறேன். (27)

காசியபீய சில்பசாஸ்த்ரத்தில் ரஜ்ஜுபந்தநவிதி என்னும் எண்பத்தைந்தாவது படலம் முற்றும்.



|| 𑌅𑌥 𑌷𑌡𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ||

𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 ||

𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌤𑍍 𑌶𑍃𑌣𑍁 𑌸𑍁𑌵𑍍𑌰𑌤 |
𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌂 𑌚𑌾(𑌆)𑌨𑍂𑌪𑌕𑌂 𑌚 𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌮𑍃𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 || ௧ ||

𑌅𑌶𑌕𑍍𑌯𑌂 𑌵𑌜𑍍𑌰𑌕𑌠𑌿𑌨𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌤𑌨𑍂𑌸𑌿𑌕𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍁𑌖𑌖𑍇𑌯𑌪𑌾𑌤𑍍 𑌵𑌜𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 || ௨ ||

𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌂 𑌰𑌮𑌣𑍀𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌊𑌷𑌰𑌂 𑌤𑌦𑌾𑌨𑍂𑌪𑌕𑌮𑍍 |
𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌿𑌶𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌕𑌂 𑌤𑌦𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 || ௩ ||

𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇 𑌵𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌸𑌾𑌰𑍇 𑌰𑌮𑍇 |
𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌤𑌟𑌾𑌕𑍇 𑌵𑌾 𑌸𑍇𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌷𑌿𑌤𑌕𑍍𑌷𑌿𑌤𑍌 || ௪ ||

எண்பத்தாருவது படலம்.

மிருத்ஸம்ஸ்காரவிதி.

ஹே ஸுவ்ரத! இனி மிருத்ஸம்ஸ்கார விதியைச் சுருக்கமாகக் கூறுகிறேன். மண்ணானது ஜாங்கலம்-அநூபம்-மிச்சிரம் என்று 3 விதமாகும்

ஸுலபமாக வெட்டி எடுக்கமுடியாமல் மிகவும் கெட்டியாக இருக்கும் பூமியிலிருந்து எடுக்கப்படும் மண்ணிற்கு "ஜாங்கலம்" என்று பெயர். சிறுமணல் கலந்து, அதிக சிரமமில்லாமல் வெட்டியெடுக்கக்கூடிய மண்ணானது மூன்று முழ ஆழம் வரையில் ரமணீயமாக இருந்தால், அந்த பூமியிலிருந்து எடுக்கப்படும் மண்ணிற்கு "அநூபம்" என்று பெயர். இவ்விதமான இரண்டுவிதமான மண்ணும் கலந்திருந்தால், அதற்கு "மிச்சிரம்" என்று பெயர்.

என்றும் ஜலம் வற்றாமலும், சுத்தமாகவும், மனோஹர

ஸஶர்கம் ஸங்க்ருஹ்ய வாதோயம் ஜலாஶயாத்ததைவ வா ।
வாஸ்த்ரே ஸம்ப்ரோக்ஷயேத் ஸஶர்கம் யாவச்சுஷ்கம் பவேத் ॥
*தாவத்க்ஷீர த்ருமக்வாதை: ரக்தஸாரத்வசா தத: ஸஶர்கம்
ஜலைர்வா ।
ஸத்ரிபலாஜலேநைவ வாதேந ஸஶர்கம் து
மர்த்தயேத் ॥ ௬ ॥

தத: பிண்டத்வம் யாவத் தாவத் ஸம்ப்ரோக்ஷயேத் ஜலை: ।
த்ரிபலோஷிதாம்பஸா ஸிக்த்வா மர்த்தயித்வா து ப்ரோக்ஷயேத் ॥
ஸப்தஸப்தவாஸராந்தம் பிண்டம் க்ருத்வா து தத்புந: ।

மாகவும் இருக்கக்கூடிய நதி அல்லது குளத்திலிருந்து மண்ணை எடுக்கவேண்டும்.

அந்த மண்ணானது வெளுப்பு-சிவப்பு-மஞ்சள்-கருப்பு என்று 4 விதமாகும்.

சேற்றை எடுத்து (அதைத் தண்ணீரில் கலக்கி புதுத் துணியினாலே அதை) வடிக்கட்டி எடுக்கவேண்டும். அதை (மண்) பாண்டத்தில் வைத்து நீர் சுண்டி இறுகும்படி வைக்கவேண்டும். (5)

அதை நீர் சுண்டும் வரையில் பத்திரமாகக்காப்பாற்ற வேண்டும். பிறகு நாற்பால் மரப்பட்டையின் சாற்றையும் கருங்காலி, மருது, இவைகளின் பட்டைச்சாறு அல்லது கஷாயத்தையும் விட்டு அந்த மண்ணை நன்கு பாத்திரத்தில் மர்திக்கவேண்டும். அதை உருண்டையாகக்கூடியவரையில் மறுபடியும் நீரைச்சுண்டவைக்கவேண்டும். அதன் பிறகு திருபலோஷித ஜலத்தை (கடுக்காய்-தானிக்காய்-நெல்லிக்காய் இவைகளின் தூள்களை ஜலத்தில் ஊரவைத்து அந்த ஜலத்தை) விட்டு அந்த மண்ணை நன்கு பிசைந்து, அதை

*௬-அ ப்ரோக்ஷகாத்ருகா: வா0: ஸஶ்லேஷ்மாஷ்மயஸ்மாத்ருகா
மத: ।

[illegible] || ८ ||

[illegible] || ९ ||

[illegible] || १० ||

மறுபடியும் நீர்ச்சுண்டும்படி வைக்கவேண்டும். அதில் நீர் முழுமையும் சுண்டாமல் பிண்டமாக (உருண்டையாக)ப் பிடிக்கக்கூடிய அளவுக்கு மண்ணைக்காயவைத்து, அதை உருண்டையாகச்செய்யவேண்டும். அந்த மண்ணுருண்டையானது அதில் கைரேகைகள் காணக்கூடிய பக்குவத்திலிருக்கவேண்டும். (8)

அந்த மண்ணை எண்கோணவடிவமான உருண்டையாகக் கையினாலே செய்யவேண்டும். அந்த உருண்டையின் சுத்தளவானது 11 அங்குலம் இருக்கவேண்டும் இந்த மண்ணானது ஒருபடியளவுடையதாகும் என்று கணக்கிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (9)

அதன்பிறகு, (பொடி) மணலையும் கருங்கல் (கூழாங்கல்) பொடியையும் ஸம அளவு சேர்த்து அதை மண்ணில் 4ல் 1 பங்கு எடுத்து மண்ணுடன் கலந்து திருபலா கஷாயத்தைவிட்டு நன்கு மர்தித்து 10, 8, அல்லது 7 நாள் (தினந்தோறும் மர்தித்து) வைக்கவேண்டும். (10½)

---

* [illegible] ||

𑌮𑍃𑌦𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌂 𑌸𑌮𑌾𑌯𑍋𑌜𑍍𑌯 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌫𑌲𑍋𑌦𑌕𑍈𑌃 ।
𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌮𑌰𑍍𑌦𑌯𑍇𑌤𑍍 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌦𑌶𑌾𑌹𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍋𑌽𑌥𑌵𑌾 ॥ ௧௨ ॥

𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌗𑍍𑌗𑍁𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌕𑍁𑌨𑍍𑌦𑍁𑌰𑍁𑌷𑍍𑌕𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌜𑌰𑌸𑌂 𑌚𑍂𑌰𑍍𑌣𑌂 𑌮𑍃𑌤𑍍𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌭𑌾𑌗𑌤𑌃 ॥

𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌮𑍃𑌦𑌾 𑌸𑌮𑌾𑌯𑍋𑌜𑍍𑌯 𑌦𑌧𑍍𑌨𑌾 𑌮𑌰𑍍𑌦𑌯𑍇𑌤𑍍 𑌸𑍁𑌧𑍀𑌃 ।
𑌶𑍁𑌣𑍍𑌠𑍀 𑌚 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑍀 𑌚𑍈𑌵 𑌮𑌰𑍀𑌚𑌂 𑌰𑌜𑌨𑍀 𑌤𑌥𑌾 ॥ ௧௩ ॥

𑌸𑌮𑌂 𑌚𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯 𑌮𑍃𑌦𑍍𑌦𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌕𑌷𑌾𑌯𑌕𑍍𑌷𑍀𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑍈𑌸𑍍𑌤𑍁 𑌮𑍃𑌦𑌾 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌮𑌰𑍍𑌦𑌯𑍇𑌤𑍍 ॥

அதன் பின்பு மலை, கோதுமை, உளுந்து, காயாம்பூ அல்லது அதன் இலை (அல்லது காயாம்பூ நிறமான உளுந்து) இவைகளைத் தூள்செய்து, மண்ணில் 8 ல் '1 பாகம் எடுத்து மண்ணுடன் கலந்து முத்திய தேங்காயின் ஜலத்தை (தேங்காயை மட்டையுடன் இடித்துப்பிழிந்த சாறு அல்லது இளநீரை) விட்டு பாத்திரத்தில் வைத்துக் கையினாலே நன்கு மர்தித்து, 10 நாள் வைத்திருக்கவேண்டும். (அல்லது 10 நாள் மர்தித்து வரவேண்டும்.) (12)

ஸ்ரீ வேஷ்டகம் (திருவட்டம் பிசின்), குக்குலம் (குக்கில்), குந்துருஷ்கம் (பூனைக்கண் குங்கிலியம்), ஸர்ஜரஸம் (குங்கிலியம்) இவைகளைப் பொடிசெய்து, மண்ணில் 16ல் 1 பங்கு மண்ணுடன் கலந்து, தயிரைவிட்டு, பாத்திரத்தில் மர்திக்கவேண்டும்.

பிறகு, சுக்கு–திப்பிலி–மிளகு–மஞ்சள் இவைகளின் தூள்களை ஸம அளவு சேர்த்து, அதை மண்ணில் 10ல்

'𑌮𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌂 𑌸𑌮𑌾𑌯𑍋𑌜𑍍𑌯𑌂 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌫𑌲𑍋𑌦𑌕𑍈𑌃 ।
𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌵𑌾 𑌮𑌰𑍍𑌦𑌯𑍇𑌤𑍍 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 [illegible] ॥ 𑌇𑌤𑌿 [illegible] 𑌪𑌾𑌠𑌃 ।

கபித்தபில்வநிர்யாஸசூர்ணௌ தௌ ஸமதாம் கதௌ |
ம்ருதி பஞ்சதஶாம்ஶே வா தைலயுக்சூர்ணமர்தயேத் ||
[ம்ருத: பஞ்சதஶாம்ஶேந ம்ருதா தைலேந மர்தயேத் |]
ததஶ்ச குஷ்டகைரிகம் (பா: குஷ்டகம்) சந்தநாகருகர்ப்பூர
தாளகம் |
அதஸீஸ்நேஹகம் ரோசநாம் த்ரிம்ஶாம்ஶகேந மர்தயேத் || ௧௭ ||
சூர்ணம் க்ருத்வா து ஸம்பாகம் ம்ருதஸ்த்ரிம்ஶாம்ஶ
ஸம்மிதம் |
அதஸீஸ்நேஹஸம்யுக்தம் மர்தயேச்சைவ யத்நத: || ௧௮ ||
ஸ்வர்ணரஜதசூர்ணம் யதாலாபம் து யோஜயேத் |
த்ரிமதி ம்ருணாதிவஸ்த்ராதிவஸ்த்ரம் ச ம்ருதுகோமலே || ௧௯ ||
மத்யே வ்ருஷபுச்சம் ச மார்ஜநைஶ்ச விஶேஷத: |
[வஸ்த்ரகாண்டம் நீரோக்ஷித கஷாயோஷ்ணாதிஸாதநா: ||

1 பங்கு, மண்ணுடன் கலந்து, தேன்–பால்–நெய் இவைகளை விட்டு, பாத்திரத்தில் மர்திக்கவேண்டும். (15)

விளாம்பிசின், பில்வப்பிசின் இவைகளைப் பொடி செய்து ஸம அளவாகச் சேர்த்து, அதை மண்ணில் 15ல் 1 பங்கு மண்ணுடன் கலந்து, நல்லெண்ணெ விட்டு நன்கு மர்திக்கவேண்டும்.

பிறகு, கோஷ்டம்–கைரிகம் (நற்செங்கல் அல்லது காவிக்கட்டி), தாளகம், சந்தநம்–அகில்–பச்சைக்கற்பூரம்–கோரோசனை–இவைகளைப் பொடித்து ஸம அளவாகக் கூட்டி, மண்ணில் 30ல் 1 பாகம் மண்ணுடன் கலந்து, அதஸீஸ்நேஹம் (காயாஞ்செடி அல்லது விதையின் எண்ணெ, அல்லது குதம்பை எண்ணெ) விட்டுக் கலந்து நன்கு மர்த்திக்கவேண்டும். (18)

தங்கம்–வெள்ளி இவைகளின் பொடியைக் கிடைத்த வரையில் அந்த மண்ணுடன் சேர்த்து மர்திக்கவேண்டும்.

𑌗𑌜𑌦𑌨𑍍𑌤𑌾𑌦𑍍𑌗𑍋𑌵𑌿𑌷𑌾𑌣𑌾𑌗𑍍𑌰𑌾𑌚𑍍𑌛𑍃𑌙𑍍𑌗𑌾𑌗𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑍃𑌷𑌭𑌸𑍍𑌯 𑌚 ।]
𑌸𑌂𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 𑌯𑌥𑌾𑌯𑍋𑌗𑌂 𑌨𑌾𑌨𑌾𑌗𑌨𑍍𑌧𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௦ ॥

𑌕𑌪𑌿𑌤𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌸𑌜𑍈𑌰𑍍𑌵𑌾 𑌮𑌧𑍁𑌨𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌮𑌰𑍍𑌦𑌯𑍇𑌤𑍍 ।
𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌾𑌦𑍍𑌰𑌿𑌨𑌦𑍀𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌫𑌲𑌂 𑌤𑌥𑌾 ॥ ௨௧ ॥

𑌕𑍁𑌲𑍀𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌕𑌾𑌯 𑌤𑌟𑌾𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌯𑌿𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌕𑍍𑌷𑌾𑌰𑍇𑌣 𑌸𑌂𑌯𑍋𑌜𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥ ௨௨ ॥

[𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌾𑌦𑍍𑌰𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌂 𑌕𑍂𑌪𑌤𑌟𑌾𑌕𑌂 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌫𑌲𑍇 𑌤𑌥𑌾 ।
𑌕𑍁𑌲𑍀𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌕𑌾𑌯 𑌤𑌟𑌾𑌕𑌸𑍍𑌥𑌾𑌯𑌿𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ॥
𑌸𑍍𑌥𑌾𑌯𑌿𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌸𑌾𑌰𑍇𑌣 𑌸𑌂𑌯𑍋𑌜𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ।]

𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑍍𑌦𑌶𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌜𑍈𑌃 ।
𑌪𑌕𑍍𑌵𑌂 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌦𑍋𑌪𑌰𑌿 𑌸𑌂𑌵𑍇𑌷𑍍𑌟𑌨𑌮𑍍 ॥ ௨௩ ॥

𑌏𑌕𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌾 ।

புத்து 1, மலை 2, நதீ 3, வயல் 4, நண்டுவளை 5, என்றும் ஜலம் வற்றாத ஏரி முதலியவை 6, ஸமுத்திரம் 7, யானையின் தந்தம் 8, பசு அல்லது விருஷபத்தின் கொம்பு 9, கலப்பையின் நுனி (கொழு) 10, ஆகிய பத்து இடங்களிலிருந்து எடுக்கப்படும் மண்ணுக்கு "தசமிருத்திகை" என்று பெயர். இவைகளில் கிடைத்த வரையில் ஸம்பாதித்து, அவைகளுடன் வாஸனைத் திரவியங்களையும் சேர்த்து, விளாம் பிசின் அல்லது தேனை விட்டு நன்கு மர்திக்கவேண்டும்.

பிறகு, முத்திய தேங்காயை மட்டையுடன் இடித்து அதன் சாறை எடுத்து அதை, தசமிருத்திகையின்மேலே, 1, 1½, 2, அல்லது 2½ அங்குலம் நிற்கும்படி விட்டு, 5 நாள் வைத்திருக்கவேண்டும். (22)

அந்த தசமிருத்திகையை, மண்ணில் 4ல் 1 பங்கு மண்ணுடன் சேர்த்து மர்தித்து அதை, ரஜ்ஜுபந்தனத்திற்குமேலே பூசவேண்டும். அதற்குமேலே, மறுபடியும்

[𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌂𑌶𑌂 𑌸𑌬𑌨𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌲𑍇𑌪𑌂 𑌤𑍁 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌰𑌜𑍍𑌜𑍁𑌬𑌨𑍍𑌧𑍋𑌪𑌰𑌿 𑌮𑍃𑌦𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌰𑌜𑍍𑌜𑍁𑌵𑍇𑌷𑍍𑌟𑌯𑍇𑌤𑍍 ॥
𑌤𑌤𑍍𑌰 𑌰𑌜𑍍𑌜𑍁𑌘𑌨𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌏𑌕𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।]
𑌤𑌤𑍋 𑌲𑍇𑌪𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌶𑍋𑌷𑌣𑌕𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜 ॥

𑌤𑌾𑌵𑌤𑍍 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌲𑍇𑌪𑌂 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 ।
𑌬𑌹𑌿𑌰𑍍𑌭𑌾𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑌘𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑌂𑌶𑌂 (𑌚𑌤𑍁𑌰𑌾𑌂𑌶
𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑌂) ॥ ௨௫ ॥

𑌏𑌕𑌾𑌂𑌶𑌲𑌾𑌪𑌯𑌿𑌕𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌅𑌨𑍂𑌪𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌲𑌾𑌪𑌯𑌿𑌤𑌸𑍍𑌯𑌂 𑌮𑍃𑌦𑌾 𑌸𑌾𑌪𑍍𑌯𑍇𑌵 𑌮𑌿𑌶𑍍𑌰𑌨𑌾𑌮𑌯𑌿 ॥ ௨௬ ॥
[𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌲𑌾𑌪𑌯𑌿𑌤𑍁 𑌸𑍍𑌯𑌂 𑌮𑍃𑌦𑌾 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑍀 ।]

𑌤𑌦𑍍𑌦𑍇𑌶𑌜𑍇𑌨 𑌦𑍇𑌵(𑌵𑌾𑌲𑌾𑌕𑌂)𑌤𑌦𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌾𑌂 𑌮𑍃𑌦𑌂 𑌸𑌮𑌾
𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।

ரஜ்ஜூபந்தநம் செய்யவேண்டும். முதல் ரஜ்ஜூபந்தநத்திற்குமேலே, மிருல்லேபநம் செய்து, மறுமுறை செய்யப்படும் ரஜ்ஜூபந்தநத்தின் கனமானது, (அங்கங்களுக்கேற்றவாறு) 1, 2, அல்லது 3 அங்குலமிருக்கவேண்டும்.

அதன் பிறகு, மண்ணைப்பூசி, அதை உலரவைத்து, அது உலருவதற்கு முன்பு அதை கவனித்து, அவசியமான இடங்களில் மெள்ள மெள்ள மண்ணைப்பூசி வரவேண்டும்.

(இருமுறை ரஜ்ஜூபந்தநம் செய்தபின்பு) சூலத்திற்கு வெளியேயுள்ள கனத்தை 4 பங்குகளாகச் செய்துகொள்ள வேண்டும். அந்த 4 பங்குகளில் ஒரு பங்கு கனம் மண்ணைப் பூசுவதற்கு "அநூபம்" என்று பெயர். அதற்குமேலே 2 பங்கு கனம் மண் பூச்சிற்கு, "மிச்சிரம்" என்று பெயர். அதற்குமேலே ஒரு பங்கு மண் பூச்சிற்கு "ஜாங்கலம்" என்று பெயர்.

இந்த மண்பூச்சுக்களை, அந்தந்த தேசத்திய மண்ணைக் கலந்து, பொருத்தமாகக் கல்பிக்கவேண்டும்.

𑌶𑍇𑌷𑌂 𑌕𑌾𑌷𑍍𑌠𑍇𑌨 𑌸𑌂𑌪𑍇𑌷𑍍𑌯(𑌂)𑌵𑍇𑌷𑍍𑌟𑌂 𑌶𑍇𑌷𑌂(𑌵𑍇𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌂
𑌤𑌤𑍍) 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 || ௨௭ ||

𑌶𑍇𑌷𑌂 𑌕𑌾𑌲𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌵𑌾(𑌤𑍍𑌵𑌾)𑌦𑌿𑌯𑌾𑌕𑍍𑌤𑌂 𑌕𑌲𑍍𑌕(𑌲𑍍𑌕𑌂)𑌤𑌤𑍍
𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 |
𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌲𑍍𑌕𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 || ௨௮

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮
𑌷𑌡𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ||

கீழே கூறப்பட்ட 3 பங்குகள் நீங்கிய 4வது பாகத்தை, (4வது பாகமாகப் பூசவேண்டிய மண்ணுடன்) சணல் முதலியவை (பஞ்சுத்துகள்)களைக் கல்கத்துடன் நன்கு கலந்து மர்தித்து, அந்த கல்கத்தினாலே காலகிரமத்தில் லேபநம் செய்யவேண்டும்.

இவ்விதமாக, மிருத்ஸம்ஸ்காரம் கூறப்பட்டிருக்கிறது. இனி கல்கஸம்ஸ்காரத்தைக் கூறுகிறேன். (28)

காசியபிய சில்பசாஸ்திரத்தில் மிருத்ஸம்ஸ்கார லக்ஷணமென்னும் எண்பத்தாருவது படலம் முற்றும்.



॥ 𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌾𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌕𑌲𑍍𑌕𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 ॥

𑌅𑌥 𑌕𑌲𑍍𑌕𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌤𑌟𑌾𑌕𑍇 𑌵𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾𑌯𑌾𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ॥ ௧ ॥

𑌸𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌯𑌥𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍇 (𑌨𑌿𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍇)
𑌜𑌲𑍇 𑌸𑌹𑌿𑌤𑍇 (𑌪𑌙𑍍𑌕𑍇) ।
𑌸𑍍𑌥𑍂𑌲𑌾 𑌪𑌾𑌂𑌸𑍁𑌰𑌜𑌾 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 ॥ ௨ ॥
[𑌸𑍍𑌥𑍂𑌲𑌾 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 ।]

𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾 𑌶𑍋𑌷𑍍𑌯𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌂
𑌕𑌾𑌰𑍁 ।
𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌪𑍇𑌷𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌚𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍁
𑌤𑌤𑍍 𑌕𑌾𑌰𑍁 (𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍) ॥ ௩ ॥

𑌤𑍍𑌰𑌿𑌫𑌲𑍋𑌤𑍍𑌥𑍇𑌨 𑌸𑌂𑌮𑌿𑌶𑍍𑌰𑍍𑌯 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌶𑍋𑌷𑌯𑍇𑌤𑍍 ।
𑌕𑌪𑌿𑌤𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌸𑌜𑌲𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜 ॥ ௪ ॥

எண்பத்தேழாவது படலம்.

கல்கஸம்ஸ்காரவிதி.

இனி, கல்கவிதியைச் சுருக்கமாகக் கூறுகிறேன். ஆறு-குளம்-ஏரி-வயல் இவைகளில், உப்புநீரில்லாமல் சுத்தமான நீருள்ள இடத்தில், ஜலத்தில் மணலுடன் கலந்திருக்கும் பெருமணல் அல்லது சுக்கானில், தேறிய சுக்கைப்போன்ற நிறமுள்ளதாகப் பார்த்து எடுத்து, அதைக்கழுவி, நன்கு உலரவைத்து, அதை நன்கு பொடிசெய்யவேண்டும்.

அந்தத் தூளில் திருபலா கஷாயத்தைவிட்டு நன்கு மர்தித்துப் பிண்டமாகச் செய்து, அதை உலரவைக்க வேண்டும். (3½)

விளாம்பிசின் ஜலம் 3 விதமாகும், அவைகள் முறையே

ம்ருத்பிண்டஸ்ய பஞ்சபாகம் ஸார்தபஞ்சாய ஷட்பாகம் ।
ஸ்ருவம் ஸ்வச்சம் ச ஸேகம் ச க்ரமாத் வாரி ச க்ரமாத் ॥

ஸ்வச்சஸேகஜலே த்யக்த்வா ம்ருத்பிண்டம் பேஷயேந்நவநீதவத் ।
கார்பாஸதந்துகலிதாநி ச்சூர்ணம் ஸம்ம்ருத்ய பேஷயேத் ।

கல்கம் பிந்நம் து யத்தத்து கடப்லீபிந்நதாவத் ।
ஸாதத் கல்கம் ஸமாலிப்ய ப்ரதமம் கல்கமிஷ்யதே ॥ ௭ ॥

ம்ருத்பிண்டஸ்ய த்ரிபாகம் ஸார்த த்ரிபாகம் ச சதுர்
பாகம் ।
மத்யபந்தஜலம் த்ரேதா த்ரிவிதம் பரிகல்பிதே ॥ ௮ ॥

